**தலைப்பு 285 – விவசாயத் திணைக்களம்**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியற்ற அபிப்பிராயம்**

விவசாயத் திணைக்களத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் விவசாயத் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2020 யூன் 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வுச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தித்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 யூன் 15 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட அந் நிதிக் கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான விவசாயத் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியற்ற அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பு**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள்

தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

  எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாகவும்

(ஆ) முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதி நிலைமை தொடர்பான கூற்று

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| முன்னைய ஆண்டின் நிதியல்லாத சொத்துக்களின் இறுதி மீதி ரூபா.17,961,282,882 ஆக இருந்த போதும் மீளாய்வாண்டின் ஆரம்ப மீதியாக ரூபா.21,994,435,383 எனக் குறிப்பிடப்பட்ட காரணத்தினால் ரூபா.4,033,152,501 கூடுதலாக காணப்பட்டது. | நிதிக்கூற்றுக்களை சீராக்கம் செய்ய வேண்டும். | இறுதி நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது குறித்த மாதிரியில் நடவடிக்கை எடுத்தமையால் கணனி மயப்படுத்தும் போது இது விடுபட்டிருந்ததாகவும் எதிர்காலத்தில் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |

### 1.6.2 வர்த்தக முற்பணக் கணக்கு

திணைக்களத்தினால் 28502 ஆம் இலக்க வர்த்தக முற்பணக் கணக்கின் நடவடிக்கைகள் நிறைவேற்றப்பட்டிருந்தன. கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட அக்கணக்கு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் பயிர்ச்செய்கை சேதங்கள் மற்றும் இருப்பு நட்டங்களாக ரூபா.18,570,224 கணக்கீடு செய்யப்பட்டிருந்த போதும் அச்சேதங்களை கணக்கீடு செய்த அடிப்படை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இருப்புச்சேதங்களை கணக்கீடு செய்த அடிப்படை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். | இச்சேதங்களை கணக்கீடு செய்த அடிப்படை நிதிக்கூற்றுக்களில் எதிர்காலத்தில் வெளிப்படுத்தப் படுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) சொத்துக்கள் மீள் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டிய போதிலும் 11 நிறுவனங்களுக்குரிய 13 மோட்டார் வாகனங்கள் அவ்வாறு மீள்மதிப்பீடு செய்து கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்களின் பெறுமதி சரியாக கணக்கிடப்பட வேண்டும். | இம் முற்பணக் கணக்கில் நிலையான சொத்துக்கள் பெறுமானத்தேய்வு செய்யும் முறை, பெறுமானத்தேய்வு அடிப்படை, பெறுமானத் தேய்விற்காக எந்த சொத்துக்கள் அடிப்படையாக கொள்ள வேண்டும் என்ற தீர்மானங் களுக்காக பொது திறைசேரியிடம் விசாரிக்கப்பட்டுள்ளதுட ன் அதன் படி எடுக்கும் தீர்மானத்தின் பிரகாரம் எதிர்வரும் நடவடிக்கைகள் எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது |
| (இ) பட்டஅத்த பிரதி விவசாய பணிப்பாளர் அலுவலகத்தின் இருப்பு மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் ரூபா.45,992 தொகையான எழுதுகருவி இருப்புக்களின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் ரூபா.399,192 என ரூபா.353,200 கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தன. | நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும் | நிதிப்பிரமாணம் 505 இன் பிரகாரம் 2020 ஆம் ஆண்டிற்காக நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படும் போது சரி செய்வதாக அறிவிக்கப்பட்டிருந்தது |
| (ஈ) பீதுருதலாகல விதை உற்பத்தி விவசாயப் பண்ணையின் இருப்பு மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் ஏனைய நுகர்வுப் பொருட்கள் இருப்பின் பெறுமதி ரூபா.1,315,140 ஆக இருந்த போதும் நிதிக்கூற்றுக்களில் அது ரூபா.135,140 என ரூபா.1,180,000 குறைத்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தன. | நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும் | நிதிப்பிரமாணம் 505 இன் பிரகாரம் 2020 ஆம் ஆண்டிற்காக நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படும் போது சரி செய்வதாக அறிவிக்கப்பட்டிருந்தது |

| | | | |
|---|---|---|---|
| (உ) | 15 பிரதி விவசாய பணிப்பாளர் அலுவலகங்களின் ரூபா.174,439,461 பெறுமதியான கட்டிடங்களுக்குரிய பெறுமானத்தேய்வு கணக்கிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | பெறுமானத்தேய்வு சீராக்கங்கள் செய்யப்பட வேண்டும் | இம் முற்பணக் கணக்கில் நிலையான சொத்துக்கள் பெறுமானத்தேய்வு செய்யும் முறை, பெறுமானத்தேய்வு அடிப்படை, பெறுமானத் தேய்விற்காக எந்த சொத்துக்கள் அடிப்படையாக கொள்ள வேண்டும் என்ற தீர்மானங் களுக்காக பொது திறைசேரியிடம் விசாரிக்கப்பட்டுள்ளதுட ன் அதன் படி எடுக்கும் தீர்மானத்தின் பிரகாரம் எதிர்வரும் நடவடிக்கைககள் எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது |
| (ஊ) | சீதாஎலிய கிளைத் தொகுதியினதும் கன்னொருவ விதை கிழங்கு பண்ணையின் நிலையான சொத்துக்கள் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் ஆண்டில் கொள்வனவாக குறிப்பிடப்படாத ரூபா.7,288,412 ஆன அலுவலக உபகரணங்கள், தளபாடங்கள் மற்றும் இயந்திரங்கள் மற்றம் கருவிகளின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் கொள்வனவாக குறிப்பிடப்பட்டிருந்தமை காரணமாக அச்சொத்துக்களுக்காக மீளாய்வாண்டிற்காக ரூபா.200,898 நிதிஏற்பாடு சீராக்கப்பட்டிருந்தன. | நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும் | நிதிப்பிரமாணம் 505 இன் பிரகாரம் 2020 ஆம் ஆண்டிற்காக நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படும் போது சரி செய்வதாக அறிவிக்கப்பட்டிருந்தது |
| (எ) | மல்வத்த விதை உற்பத்தி பண்ணையின் நிலையான சொத்துக்கள் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் உழவு இயந்திரங்கள் மற்றும் டேலர் ஆரம்ப மீதி ரூபா.25,149,500 ஆக இருந்த போதும் அது நிதிக்கூற்றுக்களில் ரூபா.27,749,500 ஆக ரூபகா.2,600,000 கூடுதலாக கணக்கீடு செய்த காரணத்தினால் ஆண்டிற்குரிய பெறுமானத்தேய்வு ரூபா.130,000 கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தன. | நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும் | நிதிப்பிரமாணம் 505 இன் பிரகாரம் 2020 ஆம் ஆண்டிற்காக நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படும் போது சரி செய்வதாக அறிவிக்கப்பட்டிருந்தது |

| | | | |
|---|---|---|---|
| (ஏ) | கந்தபொல விதை உருளைக்கிழங்கு பண்ணைக்கு சொந்தமான 2019 திசெம்பர் 03 கையேற்கப்பட்ட லொரியின் பெறுமதியும் நிலையான சொத்துக்கள் மெய்மையாய்வு அறிக்கையில் 47 இயந்திரங்களின் பெறுமதியும் கரதியனாறு மரக்கரி பண்ணையின் 15 கட்டிடங்களின் பெறுமதியும் மதிப்பிடப்பட்டு சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | நிலையான சொத்துக்கள் மற்றும் உரிய பெறுமானத்தேய்வு என்பன கணக்கீடு செய்யப்பட வேண்டும் | இம் முற்பணக் கணக்கில் நிலையான சொத்துக்கள் பெறுமானத்தேய்வு செய்யும் முறை, பெறுமானத்தேய்வு அடிப்படை, பெறுமானத் தேய்விற்காக எந்த சொத்துக்கள் அடிப்படையாக கொள்ள வேண்டும் என்ற தீர்மானங் களுக்காக பொது திறைசேரியிடம் விசாரிக்கப்பட்டுள்ளதுடன் அதன் படி எடுக்கும் தீர்மானத்தின் பிரகாரம் எதிர்வரும் நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது |
| (ஐ) | கண்ணோருவ காய்கறி விதை நிலையத்தின் நிலையான சொத்து மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் ஆண்டினுள் இயந்திர உபகரணங்கள் கொள்வனவு செய்யப்படாதிருந்த போதும் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட பின்னிணைப்பு 03 இல் முறையே ரூபா.5,156,132 மற்றும் ரூபா.1,428,660 எனக் குறிப்பிடப்பட்டிருந்தமை காரணமாக அப்பெறுமதியால் ஆண்டின் கையேற்றல் கூடுதலாகவும் ஆண்டில் பெறுமானத்தேய்வு ரூபா.164,620 கூடுதலாகவும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தன. | நிதிக்கூற்றுக்கள் சரியான பெறுமதிகள் சரியாக காண்பிக்கப்பட வேண்டும் | 2020 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது |

### 1.6.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

கீழே காட்டப்பட்டுள்ள கொக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்காய்வு சான்றுகள் சமர்பிக்கப்படாமையால் அவற்றை கணக்காய்வின் போது திருப்திகரமாக அவதானிக்க முடியாமல் இருந்தது.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் பண்ணை முற்பணக் கணக்கின் சொத்துக்கள் அகற்றல் கிரயமாக ரூபா.50,456,727 என காண்பிக்கப்பட்டிருந்த போதும் அதற்குரிய அகற்றல் பெறுமானத்தேய்வு குறிப்பாக கணக்கடப்பட்டு உரிய அட்டவணை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை | கணக்காய்விற்கு தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் | இம் முற்பணக் கணக்கில் நிலையான சொத்துக்கள் பெறுமானத்தேய்வு செய்யும் முறை, பெறுமானத்தேய்வு அடிப்படை, பெறுமானத் தேய்விற்காக எந்த சொத்துக்கள் அடிப்படையாக கொள்ள வேண்டும் என்ற தீர்மானங் களுக்காக பொது திறைசேரியிடம் விசாரிக்கப்பட்டுள்ளதுடன் அதன் படி எடுக்கும் தீர்மானத்தின் பிரகாரம் எதிர்வரும் நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) | பண்ணை பராமரிப்பு மற்றும் விதை சந்தைப்படுத்தல் முற்பண கணக்கு செயற்பாட்டிற்குரிய மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட ரூபா.12,175,459 தொகையான கடன்கொடுத்தோர் மீதியை உறுதிப்படுத்துவதற்கு தேவையான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | கணக்காய்விற்கு தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் | இக்கடன் மீதி விவசாய அமைச்சினால் ஏதேனும் நடவடிக்கைகளை நோக்கி ஆண்டின் இறுதியின் போது வழங்கப்பட்ட தொகையாகும். இதன் உறுதிப்படுத்தலை செயலாளரே உறுதிப்படுத்த வேண்டும் அது தொடர்பாக விசாரித்த போதும் பதில் அளிக்கப்படவில்லை என அறிவிக்கப்பட்டிருந்தது. |

## 1.6.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

| அவதானிப்பு | | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை | | |
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் xix ஆம் அத்தியாயத்தின் 6.1 உப பிரிவு | ஏதேனும் பதவியொன்றுக்கு ஒதுக்கப்பட்ட வீடொன்று தவிர ஏனைய சகல அரசின் வீடுகளின் குத்தகை காலம் 5 ஆண்டுகளாக இருந்த போதும் மேற்கொள்ளப்பட்ட தெரிவு கணக்காய்வு பரிசோதனயின் போது 2 நிறுவனங்களில் 10 உத்தியோகத்தர்கள் 05 ஆண்டுகளை விஞ்சி 03 ஆண்டு முதல் 14 ஆண்டுகள் 11 மாதங்கள் வரையான காலமாக அரச வீடுகளில் தொடர்ச்சியாக குடியிருப்பதாக அவதானிக்கப்பட்டது. | தாபன விதிக் கோவையின் பிரகாரம் உத்தி யோகத்த வீடுகளில் இருந்து வாடகை அறவிடப்பட வேண்டும் | உரிய காலத்திற்கு மேலாக குடியிருப்பவர்களை அகற்றி காத்திருக்கும் பட்டிலில் உள்ள ஏனைய உத்தியோகத்தர்களுக்கு வீடுகளை வழங்க நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) | இலங்கை சநனநாயக சோஷலிசக் குடிரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| | (i) நிதிப்பிரமாணம் 104(4) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு விதை மற்றும் நடுகைப் பொருட்கள் அபிவிருத்தி நிலையத்திற்கும் அதற்குரிய பிரதேச அலகுகளிற்கும் உரிய 90 சந்தர்ப்பங்களில் இடம்பெற்றிருந்த ரூபா.11,994,367 தொகையான சேதங்கள் மற்றும் நட்டங்கள் தொடர்பாக 01 ஆண்டு முதல் 28 ஆண்டுகள் வரையான காலம் கடந்திருந்த போதும் பரிசோதனை செயற்பாடுகள் இடம் பெற்றிருக்கவில்லை. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 90 சந்தர்ப்பங்களில் இடம்பெற்றிருந்த சேதங்கள் மற்றும் நட்டங்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 104(4) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுமென அறிவிக்கப்பட்டிருந்தது. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | நிதிப்பிரமாணம் 175(2) மற்றும் 1993 யூலை 21 ஆந் திகதிய 320 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | பண்ணை முற்பணக் கணக்கிற்குரியதாக 01 ஆண்டு முதல் 07 ஆண்டுகள் வரையான காலம் கடந்திருந்த போதும் ரூபா.14,667,199 ஆன கடன் பட்டோர் மீதிகள் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரை அறவிடப்பட்டிருக்க வில்லை. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் கடன் பட்டோர் மீதிகளை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கும் குறித்த வருமானத்தை சேகரிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுமென அறிவிக்கப்பட்டிருந்தது. |
| (iii) | நிதிப்பிரமாணம் 177 | நாளாந்த பெறுவனவுகள் அன்றாடம் வங்கியிலிடப்பட வேண்டியதுடன் 04 நிறுவனங்களின் நாளாந்த பெறுவனவுகள் 2 நாட்கள் முதல் 11 நாட்கள் வரையான கால தாமதத்தின் பின்னர் வங்கியிலிடப்பட்டிருந்தன | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் பற்றுச்சீட்டு வழங்கப்பட வேண்டும். | எதிர்வரும் காலங்களில் பணத்தை வங்கியிலிடும் செயற்பாடுகளை முறையாகவும் செயற்திறனாகவும் நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படுமென அறிவிக்கப்பட்டிருந்தது. |
| (இ) | விவசாய அமைச்சின் சுற்றறிக்கை | | | |
| | 2003 மே 12 ஆந் திகதிய 01/2003 ஆம் இலக்க விவசாய அமைச்சின் செயலாளரின் சுற்றறிக்கை | அரசின் விடுதிகளுக்காக தொடர்ந்தும் சிக்கன வாடகை அறவிடப்பட வேண்டிய போதும் குறித்த அரசின் விடுதி திருத்தம் செய்வதற்கும் அவ்வாறு செய்யாமலும் பின்னர் வீட்டு வாடகை தாபன விதிக் கோவையின் xix ஆம் அத்தியாயத்தின் 5.2 மற்றும் 5.4 ஆம் பிரிவுகளின் திட்டவட்டமாக வாடகை அறவிடப்பட வேண்டும். குண்டசாலை விவசாய கல்லூரக்கு சொந்தமான 61 அரசின் விடுதிகளுக்காக 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக சிக்கன வாடகை அறவிடப்பட்டிருந்த போதும் வருடாந்தம் மதிபபீட்டு அறிகை பெற்றுக் கொள்ளப்பட்டிருக்க வில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் பற்றுச்சீட்டு வழங்கப்பட வேண்டும். | இந்த அரசின் விடுதிகளுக்காக விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தின் மதிப்பீட்டு அறிக்கை பெற்று அதன் பிரகாரம் வாடகை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென அறிவிக்கப்பட்டிருந்தது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 கட்டுநிதி முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| நிதிச் செயற்பாடுகளை வினைத்திறனாக கட்டுப்படுத்தவுதற்காக மாதாந்தம் திணைக்களத்திற்கு தேவையான கட்டுநிதி அளவு திட்டமிடப்பட்டு அதன் பிரகாரம் தேவையான கட்டுநிதியை கோர வேண்டிய போதிலும் மாதாந்த கட்டுநிதி திட்டம் மிகைத்து 07 மாதங்களள் கட்டுநிதி கூடுதலாக கோரப்பட்டிருந்தது. | கட்டுநிதி தேவைப்பாடு முறையாக திட்டமிடப்பட வேண்டும். | ஆண்டின் ஆரம்பத்தில் திட்டமிடப்பட்ட வகையில் திறைசேரயினால் கட்டுநிதி வழங்கப்பட்டால் ஆக்கபூர்வமான நிதிக்கட்டுப்பாடொன்று மேற்கொள்ள கூடியதாகவும் திட்டமிடப்பட்ட அளவினை விட அளவினை விட கூடுதலான கட்டுநிதி கோரப்பட்டுள்ளதாகவும் |

### 2.2 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்காய்வு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) நிதி பிரமாணம் 50 இன் படி செலவு மதிப்பீடுகளை முடிந்தவரை சரியாக தயாரிப்பது கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக இருந்த போதிலும், 15 செலவின விடய மதிப்பீடு செய்யப்பட்ட நிதிஏற்பாடுகளின் மொத்தம் ரூபா.88,256,273 அல்லது 4 சதவீதம் ஏனைய செலவின விடயங்களுக்கு மாற்றப்பட்டிருந்தன. செலவின விடயங்களுக்கு இடையே மாற்றல் 1 சதவீதம் முதல் 80 சதவீதத்திற்கு இடைப்பட்ட அளவில் காணப்பட்டன. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் சரியான மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும். | ஆளணி வேதனங்களைச் செலுத்துவதற்கும் டொலரின் பெறுமதி அதிகரித்தமையாலும் 20/2018 பொது நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் இணைந்த படிகள் கொடுப்பனவு செய்ய நேர்ந்தமை மற்றும் 20/2018 03/2014, 03/2014(1) ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் அரச உத்தியோகத்தர் களுக்கு தொடர்பாடல் வசதிகள் வழங்குவதற்கு நேர்ந்தமையால் இந்நிதிஏற்பாட்டை |

| | | | |
|---|---|---|---|
| | | | மாற்றுவதற்கு நேர்ந்ததாக அறிவிக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) | 2019 யூன் 17 ஆந் திகதிய 04/2019 ஆம் இலக்கம் மற்றும் 2019 திசெம்பர் 04 ஆந் திகதிய 07/2019 ஆம் இலக்க பாதீட்டு சுற்றறிக்கையின் பிரகாரம் மின்சாரம் மற்றும் மின்சார பாவனை, தொடர்பாடல் சேவைகள், எழுதுகருவிகள் மற்றும் அலுவலக உபகரணங்கள் கொள்வனவு மற்றும் உள்நாட்டு வெளிநாட்டு பிரயாணச் செலவினங்கள் சிககனமாக பேணிச் செல்லும் வகையில் நியதிகள் தயாரிக்கப்பட்டு செயற்படுத்துவதற்கு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் பொறுப்பாக இருக்க வேண்டிய போதிலும் குறித்த செலவின விடயங்களில் முன்னைய ஆண்டில் ரூபா.153,267,003 ஆக செலவினத்திற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் செலவினம் ரூபா.167,707,521 ஆக இருந்தமையால் ரூபா.14,440,518 அல்லது 9 சதவீதம் அதாவது 9 சதவீதம் கூடுதலாக கூடுதலாக செலவிடப்பட்டிருந்தது | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | டொலரின் பெறுமதி அதிகரித்தமையாலும் அலுவலக உபகரணங்கள் விலை அதிகரிப்பு, எரிபொருள் படிகளுக்காக உரித்துப் பெறும் உத்தியோகத்தர்கள் அதிகரித்தமை மற்றும் எதிர்பாராமல் முகங்கொடுத்த சேனா மயிர்கொட்டி தொற்று காரணமாக வெளிக்கள வேலைகள் அதிகரித்தமை இச்செலவினம் அதிகரித்தமைக்காக காரணமாக உள்ளடதாக அறிவிக்கப்பட்டிருந்தது |
| (இ) | 27 மீண்டெழும் செலவின விடயங்களில் ரூபா.226,234,559 தொகையான தேறிய தேறிய நிதிஏற்பாட்டில் ரூபா.32,977,959 அதாவது 15 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது. அச்சேமிப்பு 6 சதவீதம் முதல் 74 சதவீதத்திற்கு இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது. | சரியாக மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும். | இங்கு இச்செலவின விடயத்தின் கீழ் கிடைக்கும் நிதிஏற்பாடுகள் பணிப்பாளர் பிரிவிற்கு ஒதுக்கீடு செய்ய நேர்ந்தது. இங்கு செலவிடுவதற்கு தேவையான செலவினங்கள் இருந்த போதும்காணப்படும் நிதிஏற்பாடு போதியதாக இல்லாமையால் கடப்பாடுகளுக்கு செல்ல முடியாமையால் ஆண்டின் இறுதயில் சேமிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | 2019 ஏப்ரல் 08 ஆந் திகதிய 03/2019 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் மூலம் மூலதனச் செலவின விடயங்களுக்கு ஒதுக்கீடு செய்த நிதிஏற்பாடுகளில் 15 சதவீதம் மற்றும் 10 சதவீதம் என 25 சதவீதம் சேமிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும் ரூபா.1,723,810,000 தொகையான 44 மூலதன செலவின விடயங்களில் ரூபா.640,458,943 தேறிய ஒதுக்கீட்டில் அதாவது 37 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது. ஆனால் 10 செலவின விடயங்களில் அந்த சேமிப்பு 25 சதவீதத்தை விட மேலும் 3 சதவீதம் முதல் 75 சதவீதம் வரையான நிதிஏற்பாட்டின் அளவு சேமிக்கப்பட்டிருந்தது. மேலும் 36 மூலதன செலவினங்களிலிருந்து கட்டாயமாக 25 சதவீதம் வரையான அளவொன்று சேமிக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | மூலதன ஒதுக்கீட்டை மீள பெறுமாறு அமைச்சின் மூலம் பாதீட்டு திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், ஒதுக்கீடுகள் கையேகப்பபடவில்லை, எனவே, இந்த நிச்சயமற்ற தன்மை மற்றும் போதிய கட்டுநிதி இல்லாமை காரணமாக இந்த ஏற்பாடு சேமிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. |

## 2.3 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உட்படல்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| 02 மூலதன செலவினங்கள் தொடர்பாக தேறிய நிதிஏற்பாடுகளை மிகைத்து மொத்தம் ரூபா.583,143 ஆன பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. | நிதிஏற்பாடுகளை மிகைத்து பொறுப்புக்கள் ஏற்படுத்தப்படக் கூடாது | மேற்படி பொறுப்புக்களாக குறிப்பிடப்பட்டுள்ள செலவினங்களின் கீழ் கொடுப்பனவுகளின் பெறுமதி 2020 ஆம் ஆண்டில் உரிய ஏற்பாடுகளால் செலுத்த நடவடிக்னைக எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. |

## 2.4 முற்பணங்களை வழங்குதலும் தீர்வுசெய்தலும்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்றின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடுவதற்கு நிலுவயாக இருந்த 01 ஆண்டு முதல் 25 ஆண்டுகள் வரையான காலவீச்சில் இருந்த ரூபா.7,286,808 ஆக இருந்ததுடன் அந்நிலுவை மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வழங்கப்பட் கடன்கள் தாமதமின்றி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிலுவை மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென அறிவிக்கப் பட்டிருந்தது. |
| (ஆ) | கொடுக்கல் வாங்கல்களை தீர்த்து ஒடுக்கும் நடவடிக்கைளை மேற்கொள்வதற்கான 05 முற்பணக் கணக்குகளுக்குரிய 18 ஆண்டுகள் முதல் 28 ஆண்டுகள் வரையான காலவீச்சில் இருந்து வரும் அங்கீகரிக்கப்படாத திரண்ட தொழிற்பாட்டு நட்டத்தின் கூட்டுத்தொகை ரூபா.67,146,096 ஆக இருந்தது. | நிதிப் பிரமாணம் மற்றும் பாராளுமன்ற நிலையான கட்டளை 132அ(3) மற்றும் (4) கட்டளைகளின் பிரகாரம் செயற்படுதல் வேண்டும். | இந்தகலைப்பு முற்பணக் கணக்கு முழுமையாக பூர்த்தி செய்வதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்படுமென அறிவிக்கப்பட்டிருந்தது. |
| (இ) | 285-05 ஆம் இலக்க அத்தாட்சிப்படுத்தப்பட்ட விதைகள் மற்றும் நடுகை பொருட்கள் முற்பணக் செயற்பாடு கலைத்தல் கணக்கிற்குரிய 28 வருடங்களுக்கு மேற்பட்டிருந்த ரூபா.76,157 தொகை தீர்க்கப்பட வேண்டியிருந்தது. | நிதிப் பிரமாணம் 518 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | கலைப்பு முற்பணக் கணக்கு முழுமையாக முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 எதிர்பார்க்கப்பட்ட விளைவு மட்டத்தை பெற்றுக்கொள்ளப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | கருதுகோள் கட்டணங்கள் சீராக்கப்பட்டதன் பின்னர் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவுகள் ரூபா.14,159,141 ஆல் குறைவடைந்திருந்தன. | இலாபத்தை அதிகரிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | காணப்பட்ட சீரற்ற நிலைமை காரணமாகவும் உள்ளீட்டு விலை அதிகரித்தமை விற்பனை திருத்தம் செய்யப்படாமை என்பன இந்நிலைமைக்கான காரணமாக இருந்தன. |
| (ஆ) | கரதியனாறு விவசாயப் பண்ணையின் கடந்த போகத்தில் இலக்கிடப்பட்ட மொத்த விதை நெல் உற்பத்தி 50620 புசல் ஆக இருந்த போதும் உற்பத்தி செய்யப்பட்ட அளவு 23909 புசல் அல்லது 47.23 சதவீதமாகும். | எதிர்பார்த்த இலக்கினை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். | இப்பிரதேசத்தில் பெரும்போகத்தில் காணப்பட்ட அதிக மழை மற்றும் சிறுபோகத்தில் காணப்பட்ட வரட்சி என்பன வயல் அறுவடைக்கு தாக்கம் செலுத்தியுள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்தது. |
| (இ) | கந்தளாய் பிரதி விவசாயப் பணிப்பாளர் அலுவலகத்தின் ஒப்பந்த விதை உற்பத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கடந்த 07 போகங்களில் ஒப்பந்த விதை நெல் உற்பத்தி திட்டத்தின் கீழ் ஒப்பந்த விதைகளை உற்பத்தி செய்வதற்காக வழங்கப்பட்ட 24,500 புஷல்களின் இலக்கில் 11,484 புஷல் அல்லது 46.87 சதவீதம் மாத்திரம் அடையப்பட்டது. | எதிர்பார்த்த இலக்கினை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஆண்டுதோறும் சில வகையான விதைகளுக்கான தேவை குறைந்து வருவதால், போகத்தில் அவற்றை வாங்க சாதகமற்றதாக உணர்ந்தால் விதைகளை வாங்குவதை மட்டுப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | 2018 சிறு போகத்திற்கான காய்கறி விதை உற்பத்தி குறித்த பௌதீக மற்றும் நிதி முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் அம்பேபுஸ்ஸ காய்கறி விதை உற்பத்தி பண்ணையின் 5.75 ஹெக்டேருக்கு எதிர்பார்க்கப்படும் விதை உற்பத்தி 1,693 கிலோ ஆகும். அடையக்கூடிய விதை உற்பத்தி 470.1 கிலோ அல்லது 27.7 சதவீதமாக இருந்தது. மேலும், உற்பத்தி செய்யப்பட்ட 18 பயிர்களில் 15 சதவீதம் விதை இலக்குகளை 51 சதவீதம் முதல் 99 சதவீதம் வரை அடைய முடியவில்லை. | எதிர்பார்த்த இலக்கினை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். | இதற்கு முக்கிய காரணம், 2018 சிறு போகத்திற்கான காய்கறி மற்றும் துணை பயிர் விதைகளை உற்பத்தி செய்வதற்கு 5.4 ஹெக்டேர் பரப்பளவில் 18 வகையான பயிர்களை இலக்காகக் கொண்டது. சில பயிர்களுக்காக இனவிருத்தி விதைகள், அடிப்படை விதை இருப்பு இல்லாமை வரட்சி றநிலைமை போன்ற காரணங்கள் எனகுறிப்பிடப்பட்டிருந்தது |
| (உ) | வல்பிட பண்ணையில் 2011 முதல் ஜுலை 2019 வரையிலான காலகட்டத்தில் உள்ளீடுகளாகப் பயன்படுத்தப்பட்ட 292656 அலகுகளில் மா, துரியன் மற்றும் யானைக் கொய்யா விதைகளிலிருந்து ஒட்டு இடப்பட்ட நாற்றுகளின் எண்ணிக்கை 150980 ஆகும். அதில் வெற்றிகரமான நாற்றுகளின் எண்ணிக்கை 40956 ஆகும். மொத்த விதை உள்ளீடுகளில் 14 சதவீதமான இது குறைவாக இருந்தது. | வெளியீட்டை அதிகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் | தற்போது நாற்று மேடையில் ஒரே ஒரு ஒட்டுபவர் மாத்திமே உள்ளார். பற்றாக்குறையை நிரப்ப நாற்றுகளை உற்பத்தி செய்ய நாற்றுமேடை தொழிலாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வேலை செய்யப்படுகிறது. எனவே, அவர்களின் ஒட்டலின் விகிதம் பயிற்சி பெற்ற ஒட்டாளர்களை விட குறைவாக உள்ளது. கடந்த 6 மாதங்களில் தொடர்ச்சியான மழை மற்றும் கடுமையான வறண்ட வானிலை காரணமாக மாற்று ஒட்டலின் வெற்றி விகிதம் குறைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | KOPIA காளான் செயற்திட்டத்தின் கீழ் பஸ்யால பூங்கா ஆராய்ச்சி பண்ணையில் 2014 ஏப்ரல் 04 அன்று ஒரு காளான் பயிர்ச்செய்கை பிரிவு மற்றும் ஒரு காளான் விதை தொழிற்சாலை தொடங்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வந்தாலும், கணக்காய்வு திகதியான 2019 ஜூலை 17 இந்த பிரிவ எதிர்பாரத்த நோக்கத்திற்காக பயன்படுத்தப்படவில்லை. | எதிர்பார்த்த இலக்கினை நிறைவேற்றுவதற்கு வளங்களை ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். | பண்ணையில் பேணிச்செல்லப்படு காளாண் உற்பத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |

**3.2 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | தாவர மரபணு வள நிலையத்தில் விதை பாதுகாப்பு பிரிவில் மரபணு வங்கியினை பழுதுபார்ப்பதற்காக ரூபா.44,548,357 தொகையான செயற்திட்டத்திற்கு 2019 ஆகஸ்ட் 28 ஆம் திகதி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஒப்பந்தம் 2020 மார்ச் 30 ஆம் திகதிக்கு முன்னர் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், ஒப்பந்தகாரரினால் 60 நாட்கள் தாமதத்தின் பின்னர் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. | உடன்படிக்கையின் பிரகாரம் குறித்த காலத்தில் வேலையை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இந்த பழுதுபார்த்தல் நடவடிக்கைகள் முழுவதும் இறக்குமதி செய்யப்படுகின்ற இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்ற மையால் இந்த தாமதம் ஏற்பட்டிருந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் வேலை பூர்த்தி செய்யப்பட வேண்டிய பெறுமதி ரூபா.61,257,998 தொகையான 16 ஒப்பந்த நிர்மாண நடவடிக்கைகள் 2020 ஆகஸ்ட் 13 ஆம் திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | உடன்படிக்கையின் பிரகாரம் குறித்த காலத்தில் வேலையை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கொரோனா பரவுகின்ற நோய் காரணப்பட்டமையின் காரணமாக வேலைத்தளங்கள் சகலவற்றிலும் சாதாரணமான பிரகாரம் செயற்படுத்துவதற்கு வசதியற்றிருந்ததுடன் வரையறுக்கப்பட்ட ஊழியர்களின் தொகையொன்று ஈடுபடுத்தப்பட்டு |

| | | | |
|---|---|---|---|
| | | | பாதுகாப்பு திட்டங்களை பின்பற்றி நடவடிக்கை எடுக்கப்பட்டமையினால் வேலை மந்த கதியில் மேற்கொள்ளப்பட்டிருந்தது. எதிர்வரும் வாரத்தில் வேலையை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (இ) | குண்டசாலை விதை உற்பத்தி பண்ணையில் குழாய் நீர் முறைமையினை ஸ்தாபிக்கும் நடவடிக்கைகள் உடன்படிக்கையின் பிரகாரம் 2018 யூலை 06 ஆம் திகதி முதல் 90 நாட்களுக்குள் அதாவது, 2018 ஒக்தோபர் 06 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த போதிலும் 2020 யூன் 06 ஆம் திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | உடன்படிக்கையின் பிரகாரம் ஒப்பந்தத்தை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இந்த செயற்திட்டத்தை அமுல்படுத்தும் போது இனங்காணப்பட்ட குறைபாடுகளை சரி செய்வதற்காக தொடர்ச்சியாக முயற்சிகள் எடுக்கப்பட்டிருந்ததுடன், இந்த செயற்திட்டத்தின் பிரதான நோக்கமான பண்ணைக்கு நீர்ப்பாசன நீரை பெற்றுக் கொள்ளும் நடவடிக்கைகள் இந்த முறைமையை பயன் படுத்தி மேற் கொள்ளப்படுகின்றது என அறிவிக்கப்பட்டுள்ளது. |

### 3.3 காலதாமதத்தின் பின்னர் வேலை ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 ஆம் ஆண்டில் பொறியியல் பிரிவின் மூலம் செயற்பாட்டிற்கு கொண்டுவரப்பட்ட ஒப்பந்த பெறுமதி ரூபா.57,023,295 தொகையான 20 நிர்மாண ஒப்பந்தங்களை நிர்மாணிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட வேண்டிய குறித்த திகதியில் ஆரம்பிக்கப்படாமல் கால தாமதத்தின் பின்னர் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. | நிர்மாண நடவடிக்கைகளை குறித்த திகதியில் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அந்த காலப்பகுதியில் காணப்பட்ட அதிக மழையின் காரணமாக குறித்த திகதியில் வேலையை ஆரம்பிப்பதற்கு ஒப்பந்தகாரருக்கு முடியாதிருந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது. |

## 3.4 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2002 செப்தம்பர் 12 ஆந் திகதிய 402 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் திணைக்களத்தினால் நிதிாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் மீளாய்வாண்டிற்கான செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட வேண்டிய போதிலும் யூலை 25 ஆந் திகதி வரையிலும் முன் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையனி பிரகாரம் நடவடிக்கை நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | படிவங்களைப் பெறுவதில் தாமதம், கோவிட் -19 தொற்றுநோய் காரணமாக அலுவலகங்களை மூடுவது, நிலைபேறான அபிவிருத்தி குறிகாட்டிகளைத் தயாரிப்பதில் தாமதம், கணக்காய்வு அறிக்கை பெறுவதில் தாமதம் மற்றும் தமிழ் மொழிபெயர்ப்பாளர் இல்லாமை காரணமாக தாமதித்துள்ளதாக அறிவிக்கபபட்டிருந்தது. |

**3.5 பெறுகைகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) தாவர மரபணு வள நிலையத்தின் விதை பாதுகாப்பு பிரிவு மரபணு வங்கியை பழுதுபார்ப்பதற்கான நிர்மாண ஒப்பந்தத்தில் 03 உருப்படிகளின் கீழ் விலைகோரப்பட்டிருந்தது. முதலாவது உருப்படியின் மதிப்பிடப்பட்ட பெறுமதி ரூபா.32,200,000 ஆக இருந்தது. அதற்காக விலைகளை மூன்று கேள்விதாரர்கள் சமர்ப்பித்தனர். அதன்படி மூன்றாவது மிகக்குறைந்த ரூபா.44,548,357 தொகையை சமர்ப்பித்த ஒப்பந்தக்காரருக்கு ரூபா.12,348,357 அல்லது மதிப்பிடப்பட்ட ஒப்பந்த பெறுமதியை விட 38.20 சதவீதம் கூடுதலாக ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. | முழுமையாக சரியான மதிப்பீடொன்று தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | முன்வைக்கப்பட்ட கூறு விலைகள் சந்தை விலைகள் என்பன நியாயமானவை என்பது தெளிவாகிறது. எனவே, இந்த பழுதுபார்ப்பு இப்பொழுது செய்யப்படாவிட்டால் இடத்திற்கு பாதிப்பு ஏற்படுவதால் இதுவரை பாதுகாப்பாக இருந்த மரபணு வள மையம் அழிவடையக்கூடும். மேலும் திருத்த வேலைகளை தாமதிக்காமல் துரிதமாக செய்ய வேண்டியமையால் மேற்கூறியவற்றைக் கருத்தில் கொண்டு, வெற்றிகரமான கேள்விதாரருக்கு இந்த செயற்பாட்டை வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) தாவர மரபணு வள மையத்தின் விதை பாதுகாப்பு பிரிவின் மரபணு வங்கியின் பழுதுபார்த்தல் ஒப்பந்தத்திற்கான 2018 ஜனவரியில் ரூபா.56.22 மில்லியன் மதிப்பீடு தயாரிக்கப்பட்டது. அந்த மதிப்பீடு அரசாங்க பெறுகை வழிகாட்டல் 4.3.3. வழிகாட்டல்களின் படி, பணவீக்கம் மற்றும் பிற காரணிகளை கணக்கில் எடுத்துக்கொண்டு நாளதுவரையாக்காமல் 2019 மே மாதத்தில் மீண்டும் விலை கோரப்பட்டிருந்தது. | அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் நியதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அத்தகைய பொருட்களுக்கான நிலையான விலைகள் இல்லாததால், சந்தை விலையில் மதிப்பீடுகளைச் செய்ய முடியவில்லை மற்றும் மதிப்பீட்டு நேரத்தில் பெரிய திருத்தத்தை செய்ய முடியவில்லை. எவ்வாறாயினும், 2018 ஆம் ஆண்டிற்கான ஆரம்ப செலவு மதிப்பீடு ரூபா 40.5 மில்லியனாக உள்ளது, மேலும் இது 2019 ஆம் ஆண்டில் ரூபா 56.22 மில்லியனாக திருத்தப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் 8.9.1(அ) இன் பிரகாரம் ஒவ்வொரு பெறுகை செயற்பாட்டிலும் ரூபா.408,255 தொகையான கரடியனாறு பிரதி விவசாய பணிப்பாளர் அலுவலகத்தின் பிரதான வாயில் மற்றும் பெயர்பலகையொன்று நிர்மாணிப்பதற்கு முறையான ஒப்பந்தம் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. மேலும், மட்டக்களப்பு மாவட்டத்திற்குரிய விலை விபரங்கள் (பி.எஸ்.ஆர்) பயன்படுத்தப்பட்டிருக்க வேண்டும், ஆனால் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. | அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் நியதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் நியதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |
| (ஈ) | கரடியனாறு பிரதி விவசாய பணிப்பாளர் அலுவலகத்தின் பெறுகை குழுவினால் ரூபா.595,400 பெறுமதியான 02 ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டிருந்த போதும் அரசின் வழிகாட்டல் கோவையின் 2.8.5 வழிகாட்டலின் பிரகாரம் ஒவ்வொரு பெறுகை செயற்பாட்டிலும் எந்தவொரு நிர்மாணம் தொடர்பான நிபுணரும் குழுவிற்கு நியமிக்கப்படவில்லை மற்றும் அவர்களின் பரிந்துரைகளைப் பெற தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு நியமிக்கப்பட்டு அவர்களின் பரிந்துரை பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை . | அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் நியதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பெறுகை குழு நியமனத்தின் போது பெறுகை வழிகாட்டல் கோவையின் 2.7.7 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கைகளை முறையாக மேற்கொள்வதற்கு ஏற்பாடு களை மேற்கொள்ளுமாறும் எதிர்காலத்தில் பெறுகை மேற்கொள்ளும் போது பெறுகை வழிகாட்டல்கோவை, பெறுகை கைநூல் மற்றம் அதற்குரிய சுற்றறிக்கை என்பவற்றன் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |
| (உ) | அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் 5.6 வழிகாட்டலின் பிரகாரம் திட்டத்தின் சிறந்த விவசாய நடைமுறைகள் (GAP) கீழ் 15 பெயர்ப்பலகைகளை நிறுவுவதற்கு வழங்கப்பட்டிருந்த மானியம் ரூபா.4,251,350 தொகையான ஒப்பந்தத்திற்கான கூறுவிலை கோரும் சுருக்கமான மற்றும் தெளிவான விவரக்குறிப்புக்கள் வரைவாக்கப்பட்டு இருக்கவில்லை. அதன் | அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் நியதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இந்த ஒப்பந்தம் தொடர்பாக கேள்விதாரரின் நிதி நம்பகத்தன்மையை பரீட்சிக்க, மதிப்பிடப்பட்ட தொகையிலும் பத்து மடங்கு இருக்க வேண்டும் என்று கேள்விதாரரின் நிபந்தனைகளில் குறிப்பிட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டிருந்ததுது. |

| | | | |
|---|---|---|---|
| | காரணமாக சமர்ப்பிக்கப்பட்ட 04 குறைந்த கூறுவிலைகளில் முதல் இரண்டு பேரும் நிராகரிக்கப்பட்டிருந்தனர். | | |
| (ஊ) | விவசாயத் திணைக்களத்தின் பயறு நாற்று செயற்திட்டத்தின் கீழ் மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா.4,000,000 மற்றும் வண்ணப் பிரிப்பு இயந்திரத்திற்கு ரூபா.7,960,000 செலவிடப்பட்டு கொள்வனவு செய்த ஒப்பந்தத்திற்குரிய அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் 4.3.1 மற்றும் 4.3.2 வழிகாட்டலின் பிரகாரம் சகல தொடர்புடைய செலவு (TCE) உட்பட மொத்த கிரய மதிப்பீடொன்றுஇதன் போது தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. ஆகும். ஒரு மதிப்பீடு தயாரிக்கப்படவில்லை. இதன்போது மதிப்பிடப்பட்ட செலவில் 99 சதவீதத்திற்கும் அதிகமான செலவில் இந்த ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. | அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் நியதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இந்த இயந்திரத்தை வாங்குவதற்கான விவரக் குறிப்பில், இந்த இயந்திரத்திற்கான மின்சாரத்தை வழங்குனரே வழங்கி நிறுவ வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது |
| (எ) | வல்பிட்ட விவசாய முகாமையாளரால் பதிவு செய்யப்பட்ட வழங்குனரின் கடித தலைப்பை (Letter Head) பயன்படுத்தி போலியான விலைகளை பயன்படுத்தி ரூபா.302,200 தொகையான நாற்றுமேடை உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. | அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் நியதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தற்போது உரிய ஆரம்ப புலனாய்வு நடாத்தப்பட்டு இறுதி அறிக்கை கிடைத்துள்ளதாகவும் அதன் பிரகாரம் எதிர்வரும் நடவடிக்கை எடுப்பதாகவும் அறிவிக்கப்பட்டிருந்தது. |
| (ஏ) | வல்பிட்ட விவசாயப் பண்ணையில் சேவை புரியும் காவாலாளியின் மனைவி போலியான வழங்குனராக ஈடுபடுத்தி பலவீனமான பெறுகை செயற்பாடொன்றை பின்பற்றி விதை வகைகள், சான உரம், மற்றம் மணல் என்பன கொளவனவிற்காக 2016 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு ரூபா.4,344,075 தொகை கொடுப்பனவு | அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் நியதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தற்போது உரிய ஆரம்ப புலனாய்வு நடாத்தப்பட்டு இறுதி அறிக்கை கிடைத்துள்ளதாகவும் அதன் பிரகாரம் எதிர்வரும் நடவடிக்கை எடுப்பதாகவும் அறிவிக்கப்பட்டிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| | செய்யப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் பண்ணையின் உள்ள கட்டுப்பாட்டுச் செயற்பாடு மிகவும் பலவீனமாக இருந்தது. | | |
| (ஐ) | குண்டசாலை அரசு விதை உற்பத்தி பண்ணைக்கு நீரிணை வழங்குவதற்காக புதிய நீர் பம்பியரை முறையொன்று நிர்மாணிப்பதற்கு ரூபா.9,962,000 (வெட் இல்லாமல்) பெறுமதியில் 2018 ஆகஸ்ட் 09 ஆந் திகதி ஒப்பந்தம் அளிப்புச் செய்யப்பட்டிருந்தது. அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் 4.2.2 (அ) மற்றும் (ஆ) வழிகாட்டலின் பிரகாரம் பெறுகை காலஅட்டவணை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை 8.13.4 வழிகாட்டலின் பிரகாரம் 5 சதவீதம் பட்டியலின் மற்றும் 10 சதவீத விலை முரணுக்கும் இடமளிக்க வேண்டிய போதும் ரூபா.2,889,500 அதாவது 40.85 சதவீதம் கூடுதலாக ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. 7.9.2 வழிகாட்டலின் பிரகாரம் ஒப்பந்தத்தின் மதிப்பீட்டுப் பெறுமதி (Sub Total) மற்றம் கேள்வி பெறுமதி விலகல் 30 சதவீதம் முதல் 520 சதவீதம் வரையான வீச்சு காணப்பட்ட போதும் அதற்கான காரணங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டிருக்க வில்லை. மேலும் 5.4.8 வழிகாட்டலின் பிரகாரம் வேலைகளை பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்த்த திகதியில் 28 நாட்களுக்கு மேலாக பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதும் 90 நாட்கள் செல்லுபடியாகும் வகையில் செயலாற்றல் பாதுகாப்பு பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. | அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் நியதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இச்செயற்திட்டத்திற்கான பெறுகை காலஅட்டவணை தயாரிக்கப்படாமல் செயற்திட்டம் தொடங்கப்பட்டது. inline booster pump பொருத்தும் இடத்தை ஈற்றியதால் மேலதிக செயற்பாட்டிற்காக ரூபா.791,875 ஆக இருந்ததுடன் அது ஆரம்ப கிரய மதிப்பீட்டின் 8.77 சதவீதமாக இருந்தது. கேள்வி கோரும் போது விரிவான விலை விபரமொன்று கோருவதற்கு தவறியமை காரணமாக கொண்டு விசாரணையில் சுட்டிக்காண்பிக்கப்பட்ட ஒவ்வொரு உருப்படிகளின் அதிக விலை விலகல் தொழில்நுட்ப மதிப்பீட்டின் போது கருத்திற்கொள்ள தவறியிருந்தது. மொத்த பெறுமதி கருத்திற்கொள்ளப்பட்டதன் பின்னர் மாத்திரம் தொழில்நுட்ப மதிப்பீட்டுத் தீழ்மானம் வழங்கப்பட்டிருந்தது. செயலாற்றல் பாதுகாப்பு பிணை 2019 மே 21 ஆந் திகதி வரை பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| (ஓ) | அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் 5.3.11 இன் பிரகாரம் செயலாற்றல் பாதுகாப்பு பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் ரூபா.159,622,609 கூட்டுத்தொகயான 90 ஒப்பந்தங்களுக்குரிய ரூபா.2,235,750 ஆன கேள்வி பாதுகாப்பு குறித்துரைக்கப்பட் திகதி அளவினை விட 02 நாட்கள் முதல் 65 நாட்கள் வரை கூடுதலான செல்லுபடிக்காலம் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் நியதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இங்கு கேள்வி பாதுகாப்பு பிணையின் காலத்தை விட 28 நாட்களுக்கு மேற்படி கேள்விப் பாதுகாப்பு நீடிக்கப்பட்டுள்ளது. கேள்வி திறக்கப்பட்டதன் பின்னர் மதிப்பீட்டுக் குழு மற்றும் பெறுகை சபையின் செயற்திறனின் பேரில் உடன்படிக்கை காலம் தீர்மானிக்கப்படுகின்றது. பெறுகை வழிகாட்டல் கோவையின் 5:3:10, 5.3.11 மற்றும் SPD-3 இன் பிரகாரம் அந்தந்த செயலாற்றலுக்காக நாட்கள் தீர்மானிக்கப் பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |
| (ஒ) | தாவர மரபணு வள நிலையத்தினால் விதைகள் தயாரிக்கும் போது காய்க்கும் போது பரப்பும் போது வளிமண்டல ஈரப்பதனை பேணிச் செல்வதற்காக பயன்படுத்தப்படும் 08 Dehumidifier இயந்திரங்கள் கொள்வனவு செய்வதற்காக மீளாய்வாண்டில் பெறுகை செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்ட போதும் பொருத்தமான கேள்விதாரர்களை தெரிவுசெய்வதற்கு முடியாததன் பேரில் 2019 யூலை 24 ஆந் திகதி பெறுகை குழுவினால் மீண்டும் பெறுகை மேற்கொள்ளுமாறு அறவிக்கப்பட்டிருந்தது. எனினும் 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வரையயிலும் குறித்த பெறுகை செயற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | தேவைகள் சரியாக இனங்காணப்பட்டு விதந்துரைகள் தயாரித்து நிதிஏற்பாடுகளை உச்ச அளவில் பயன்படுத்தக்கூடிய வகையில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | திருந்தங்களுக்காக சமர்ப்பிக்கப்பட்ட கேள்வியின் விலைகள் புதிதாக கொள்வனவு செய்வதற்கு ஏற்படும் செலவினத்துடன் ஒப்பிடும் போது கூடிய பெறுமதியொன்றற எடுப்பதாக அவதானிக்கப்பட்டதுடன் கேள்வியை புறக்கணிக்க நேர்ந்தது. அவ்வியந்திரத்தை திருத்தம் செய்வதற்கு உள்ள வாய்ப்பை பரீட்சிப்பதற்காக பேராதனை பல்கலைக்கழகத்தின் Agri Business Centre கையளிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருந்தது . |

## 3.6 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | அரசாங்கத்தின் காணி தொடர்பான செயற் கோவையின் 224 ஆவது பிரிவின் பிரகாரம் அரசாங்கத்தின் திணைக்களத்திற்கு சொந்தமான காணிப் பகுதியை அளவிடும் நடவடிக்கைகளை மேற்கொண்டு முறையான பிரகாரம் கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும், மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் பிரகாரம் விவசாய திணைக்களத்தின் 11 நிறுவனங்களுக்குரிய 592.62 ஹெக்டேயர் பரப்பளவினை உடைய காணி அளவொன்றை சட்ட ரீதியாக கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | திணைக்களம் உரிமை கோருகின்ற சகல காணிகளும் விடுவிக்கப்பட்டு உரித்தை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | உரித்தை கையளிப்பதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது என அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் பிரகாரம் 8 நிறுவனங்களுக்குரிய பெறுமதி அண்ணளவான ரூபா.10,820,000 தொகையான 13 உழவு இயந்திரங்கள், 5 மோட்டார் வாகனங்கள் மற்றும் 09 மோட்டார் சைக்கிள்கள் என்பன 02 வருடங்களுக்கும் 20 வருடங்களுக்கும் இடையிலான காலமாக பயனற்று அலுவலக வளவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | நிறுவனத்திற்கு சொந்தமான வளங்களை செயற்திறனாகவும், வினைத்திறனாகவும் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இந்த உழவு இயந்திரங்கள், மோட்டார் சைக்கிள்கள் மற்றும் மோட்டார் வகனங்களை பழுதுபார்த்து பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு அல்லது விற்றுத் தீர்ப்பதற்கு அல்லது தேவை காணப்படுகின்ற ஏனைய பிரிவுகளுக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் பிரகாரம் 05 நிறுவனங்களுக்குரிய ரூபா.11,498,859 பெறுமதியான 17 இயந்திர பொறிமுறைகள் மற்றும் 26 களஞ்சிய பொருள் விடயங்கள் 02 வருடங்களுக்கும் 18 வருடங்களுக்கும் இடையிலான காலம் பயனற்று காணப்பட்டது. | சொத்துக்களை ஆகக் கூடிய செயற்திறனுடனும் வினைத்திறனுடனும் பயன்படுத்த வேண்டியிருந்ததுடன் தேவையினை சரியாக இனங்கண்டு கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | இதில் சில பொருட்கள் பயன்பாட்டிற்கு எடுக்கப்படுவதுடன், சில பொருட்களை பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. தேவை காணப்படுகின்ற ஏனைய இடங்களுக்கு வழங்குவதற்கு அல்லது இந்த இயந்திரங்களை விற்றுத் தீர்ப்பதற்கு அல்லது தொழில்நுட்ப கல்வி பயிலும் நிறுவனங்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (ஈ) | மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் பிரகாரம் இரண்டு நிறுவனங்களில் காணப்பட்ட 02 மோட்டார் வாகனங்கள் 2020 சனவரி 17 ஆம் திகதி வரையிலும் விவசாய பணிப்பாளர் நாயகத்தின் பெயரில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. | ஏனைய நிறுவனங்களுக்கு சொந்தமான சொத்துக்களை முறையாக கையேற்று பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 57-0527 ஆம் இலக்க கெப் வண்டியின் உரித்தை கையேற்றல் தொடர்பாக மிகுதி நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (உ) | கண்ணொருவ மரக்கறி விதை நிலையத்தின் குளிரூட்டி களஞ்சியத்தின் சாதாரண இயலளவு 30,000 கிலோ கிராம் ஆக இருந்த போதிலும், தற்போது அதில் 45,000 கிலோ கிராம் அளவில் அதிக இயலளவுடன் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது டன், இது தொடர்பாக கவனம் செலுத்தி புதிய குளிரூட்டல் முறைமையொன்றை நிர்மாணிப்பது தொடர்பில் முகாமைத்துவம் கவனம் செலுத்தியிருக்கவில்லை. | புதிய குளிரூட்டி முறைமையொன்றை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டின் போது கிடைக்கின்ற நிதி ஏற்பாட்டினை கவனத்தில் கொண்டு புதிய குளிரூட்டல் முறைமையொன்றை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | 2000 திசெம்பர் 14 ஆம் திகதி தனியார் நிறுவன மொன்றிலிருந்து ரூபா.1,096,875 தொகையில் கொள்வனவு செய்யப்பட்ட Hersonber வகையின் விதை பொதியிடல் இயந்திரத்தை செயற்படுத்தும் போது விதைகளில் உலர் தன்மை உயர் பெறுமதியில் காணப்பட்டமையினால் கொள்வனவு செய்யப்பட்ட தினம் முதல் 07 மாதங்களின் பின்னர் பயன்பாட்டிலிருந்து அகற்றப்பட்டிருந்தது. | நிறுவனத்திற்கு சொந்தமான சொத்துக்களை ஆகக் கூடிய செயற்திறனுடனும், வினைத்திறனுடனும் பயன்படுத்துதல் வேண்டும். | விதைகள் பொதியிடல் இயந்திரம் தொடர்பாக தொழில்நுட்ப அறிக்கை சமர்ப்பித்தல் தொடர்பான பொறுப்பினை தீர்மானிப்பதற்காக நிதி பிரமாணம் 104(4) இன் பிரகாம் புதிய பரிசோதனைக் குழுவொன்று 2019 மார்ச் 21 ஆம் திகதி நியமிக்கப்பட்டதுடன், நாட்டில் காணப்பட்ட covid – 19 பரவும் நோய் நிலைமையின் காரணமாக இந்த பரிசோதனை நடவடிக்கைகளை பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (எ) | கறதியனாறு பிரதி விவசாய பணிப்பாளர் அலுவலகத்திற்கு சொந்தமான காணியின் அளவு 74.4 ஹெக்டேயருக்கு அண்ணளவான பிரதேசமொன்று அதாவது, மொத்த காணிப்பகுதியில் 36.5 சதவீதம் அனுமதியற்ற குடியிருப்பாளர்களால் உரிமை கோரப்பட்டிருந்ததுடன், 02 சந்தர்ப்பங்களின் போது பழவகை அபிவிருத்தி நிறுவனத்திற்குரிய காணியிலும் அனுமதியற்ற குடியிருப்பாளர்களால் 02 வீடுகளை நிர்மாணிக்கப்பட்டிருந்தன. | அனுமதியற்ற குடியிருப்பாளர்கள் உரிமை கோருகின்ற சகல காணிகளும் விடுவிக்கப்பட்டு உரித்தை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | உரிய காணியை அளந்து உரித்தை கையேற்கும் நடவடிக்கைக்காக தற்போது மட்டக்களப்பு பிரதேச செயலாளருடன் தொடர்புபட்டு மிகுதி நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படுகின்றது என அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (ஏ) | கறதியனாறு பிரதி விவசாய பணிப்பாளர் அலுவலகத்திற்கு சொந்தமான காணி அளவில் 60.4 ஹெக்டேயர்களுக்கு அண்ணளவான காணி பிரதேசம் அபிவிருத்தி செய்யப்படாத காடுகள் வளர்ந்த மலைப் பிரதேசமாக இருந்தது. நீர் வளங்கள், ஊழிய வளங்கள் மற்றும் | நிறுவனத்திற்கு சொந்தமான சொத்துக்களை உச்ச அளவில் செயற்திறனாகவும், வினைத்திறனாகவும் பயன்படுத்துதல் வேண்டும். | அபிவிருத்தி செய்யப்படாத காணி பிரதேசங்களில் பயிர் செய்கை நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்துவதற்கு காணப்படுகின்ற இயலுமை தொடர்பாக ஆராய்ந்து, காணப்படுகின்ற |

| | | | |
|---|---|---|---|
| | ஏனைய வசதிகளை வழங்குவதன் மூலம் இந்த காணிப் பிரதேசத்தில் பயிர் செய்யும் நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்த முடியுமாக இருந்தது. | | வளங்களை ஆகக் கூடிய வகையில் பயன்படுத்திக் கொள்வதற்கான ஏற்பாடுகள் வழங்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (ஐ) | கந்தளாய் விதை உற்பத்தி பண்ணையில் பசளை களஞ்சியப்படுத்துவதற்காக போதியளவான இட வசதியுடன் களஞ்சியமொன்று காணப்படாதிருந்ததுடன் பசளையினை களஞ்சியப்படுத்துவதற்காக 1974 ஆம் ஆண்டின் போது நிர்மாணிக்கப்பட்ட 1085 சதுர அடி (35x31) பரப்பளவான கட்டிடம் 2016 ஆம் ஆண்டு முதல் கூரை பழுதுபார்க்க வேண்டியிருந்தமையினால் பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத நிலையில் காணப்பட்டது. | போதிளவான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | கிடைக்கப் பெறுகின்ற நிதி ஏற்பாட்டின் பிரகாரம் புதிய பசளை களஞ்சியமொன்றை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (ஒ) | அம்பேபுஸ்ஸ விதை உற்பத்தி பண்ணையின் ஒட்டு மொத்த பரப்பளவும் 60 ஹெக்டேயர் அளவாக இருந்ததுடன் அந்த பண்ணையில் ஆரம்ப பணிப்பொறுப்பான விதை உற்பத்திற்காக 12 ஹெக்டோயர் அதாவது, ஒட்டு மொத்த காணியின் அளவில் 20 சதவீதம் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. | நிறுவனத்திற்கு சொந்தமான சொத்துக்களை செயற்திறனாகவும், வினைத்திறனாகவும் பயன்படுத்த வேண்டும். | பண்ணையில் காணப்படுகின்ற பௌதீக வளங்கள், மனித வளங்கள் மற்றும் காணப்படுகின்ற நீர் வழங்கல் வசதிகளை உள்ளடக்கி ஏனைய வளங்களின் தன்மையின் பிரகாரம் உரிய காணி அளவிற்கு விதை உற்பத்தி நிகழ்ச்சித் திட்டத்தை வரையறுக்க வேண்டி ஏற்பட்டிருந்தது. எதிர்காலத்தில் கிடைக்கின்ற வளங்களை ஆகக் கூடிய வகையில் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (ஓ) | விவசாய திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டுள்ள பண்டாரவல பிரதேச விவசாய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்தில் அமைந்துள்ள காணிக்குரிய 85 பேர்ச் அளவான காணியில் 1976 ஆம் ஆண்டு முதல் 43 வருடங்கள் முழுவதும் 20 அனுமதியற்ற குடியிருப்பாளர்களுக்காக 2010 திசெம்பர் 06 ஆம் திகதி முதல் அமுல்படும் வகையில் அகற்றுதல் கட்டளை விநியோகிக்கப்பட்டிருந்த போதும், இது வரையிலும் அந்த குடியிருப்பாளர்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | திணைக்களத்திற்கு சொந்தமான சகல காணிகளையும் விடுவித்து உரித்தை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பண்டாரவல பிரதேச விவசாய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்தின் பூனாகலை காணியில் அனுமதியற்ற குடியிருப்பாளர்கள் என்று கூறப்படுகின்ற தரப்பினர் குடியிருந்து வருவதுடன் அந்த பகுதி குறிப்பாக எங்கள் திணைக்களத்திற்கு சொந்தமான பகுதியாக இருந்ததா என உறுதிப்படுத்துவதற்கு இதுவரை முடியாதிருந்தது. அதன் பிரகாரம் அந்த காணியை அளந்து உறுதிப்படுத்துவதற்கு தற்போது பதுளை மாவட்ட நில அளவையாளர் அலுவலகத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்ததுடன், அதன் பிரகாரம் எதிர்கால நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (ஔ) | மழை நீருக்கு ஈடுகொடுக்காத ஒட்டு பழவகை கன்றுகளை நடுவதற்காக 2016 ஆம் ஆண்டின் போது ரூபா.795,000 செலவினம் ஒன்றைச் செய்து பழவகை ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தில் மழை மேவுகை கூடாரமொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும், அதன் பொலித்தீன் மேவுகை 2020 சனவரி 24 ஆம் திகதியளவில் பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத நிலையில் உக்கிப் போயிருந்தது. | வளங்களை செயற்திறனாகவும், வினைத்திறனாகவும் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிதி ஏற்பாடு கிடைத்தவுடன் உரிய பணிகளை விரைவாக பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (க) | குண்டசாலை விவசாய கல்லூரிக்குச் சொந்தமான விஜேராம விடுதியின் பழுதுபார்த்தல் நடவடிக்கைகள் 2016, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளின் போது ரூபா.5,125,803 தொகையான செலவினை செய்து பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும், அதற்குத் தேவையான மரத் தளபாடங்கள் வழங்குவதற்கு முடியாமையின் அடிப்படையில் 2020 சனவரி 20 ஆம் திகதி வரையிலும் 5 வருடங்களுக்கு அண்மித்த காலம் முதல் பயனற்று காணப்பட்டது. | நிறுவனத்திற்குச் சொந்தமான வளங்களை செயற்திறனாகவும், வினைத்திறனாகவும் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் இந்த விடுதிக்குத் தேவையான, அத்தியவசிய பொருட்களை பெற்றுக் கொண்டதன் பின்னர் மாணவர்களுக்காக விடுதி வசதிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (கா) | ஹோமாகம தாவர வைரஸ் நிலையத்தின் மூலம் இளைய வளர்ப்பு கன்றுகளைப் பெற்று நட்டுவதற்காக 1125 சதுர அடி (75x15) அளவில் வலை கூடாரமொன்று 2018 செப்தெம்பர் 03 ஆம் திகதி ரூபா 366,920 செலவினைச் செய்து வல்பிட்ட பண்ணையில் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும், அது உரிய நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படாமல் 2019 திசெம்பர் 05 ஆம் திகதி வரையிலும் விளைவற்று காணப்பட்டது. | எதிர்பார்த்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக பயன்படுத்தப்பட வேண்டும் | இளைய வளர்ப்பு கன்றுகளை பெற்றுக்கொள்வதற்குமுடியாதிருந்தமையினால் கன்றுகளை நட்டுவதற்காக இந்த வலை கூடாரம் பயன்படுத்தப்படவில்லை. எவ்வாறாயினும் இந்த வலை கூடாரம் விளைவற்று வைக்கப்படாமல் ஆக்கபூர்வமானதாக பயன்படுத்துவதற்காக நாற்றுமேடை தேவைக்காக வழங்கப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. |

## 3.7 அரச உத்தியோகத்தர்களின் பிணை வைப்பு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 880 மற்றும் 881(1) விவசாயத் திணைக்களத்தின் 2015 திசெம்பர் 11 ஆந் திகதிய 17/2015 ஆம் | நிதிப் பிரமாணத்தின் பிரகாரமும் திணைக்களத்தின் கட்டளைகள் பிரகாரமும் உரிய உத்தியோகத்தர்களால் பிணை | இதுவரை பிணை வைக்காத உத்தியோகத்தர்கள் இனங்கண்டு அவர்களின் பிணை வைப்புச் |

| | | |
|---|---|---|
| இலக்க திணைக்கள கட்டளையின் 612 ஆம் அதிகாரத்தின் கீழான அரசாங்க ஊழியர்களின் பிணை கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் 09 நிறுவனங்களின் பிணை வைக்க வேண்டிய 67 உத்தியோகத்தர்களால் 2019 திசெம்பர 10 ஆந் திகதி வரையிலும் வைக்க வேண்டிய 61 உத்தியோகத்தர்களில் பிணை வைக்கப்பட்டிருக்கவில்லை. | வைக்க வேண்டும். | செய்வதற்கு தற்போது எடுக்கப்பட்டு வருவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |

**3.8 நட்டங்களும் சேதங்களும்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மரக்கறி விதைகள் நிலையத்தில் 2014 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியின் போது உற்பத்தி செய்யப்பட்ட காய்கறி விதைகளின் முளைக்கும் தன்மை மோசமானதாக காணப்பட்டதன் காரணமாக ஏறத்தாழ ரூபா.38,338,200 பெறுமதியான 15,000 கிலோகிராம் விதைகள் அகற்றப்பட வேண்டியிருந்தன. | தேவையின் பிரகாரம் விதை உற்பத்தி செய்யப்பட்டு வழங்கப்பட வேண்டியதுடன் விதை உற்பத்தி இலக்குகள் சரியாக எதிர்வுகூறப்பட வேண்டும். | தனியார் துறையால் சந்தையில் உயர் வருமானமீட்டும் இறக்குமதி செய்யப்பட்ட கலப்பின வகைகளை அறிமுகப்படுத்துதல் சந்தையிலிருந்து உள்ளூர் வகைகளை விலக்கிவிடும் என்பதுடன் அதற்கிணங்க அக் காலங்களில் உற்பத்தி செய்யப்பட்ட விதைகளின் சில இருப்புக்கள் காணப்பட்டிருந்தன என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன். |
| (ஆ) | கந்தளாய் பிரதி விவசாயப் பணிப்பாளர் அலுவலகம் விதை நெல் உற்பத்தி மற்றும் ஒப்பந்த விதை நெல் உற்பத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட 846004 கிலோகிராம் அல்லது 41268 புசல் விதை நெற்களை விதை நெல்லாக வழங்காமல் அவற்றை நுகர்வோர் நெல்லாக வழங்கியிருந்தது. | அத்தகைய விதை நெற்களின் தரத்தை பேணுவதற்காக விதை நெல் முறையாக களஞ்சியப்படுத்தப்பட வேண்டும். | பண்ணையில் உற்பத்தி செய்யப்பட்ட அனைத்து வகைகளும் விற்பனை செய்யப்படுவதற்கான சாத்தியத்தன்மை எப்பொழுதும் காணப்படுவதில்லை என்பதுடன் இது அப் பருவகாலத்திலுள்ள கேள்வியில் தங்கியுள்ளது. விதை நெல்லிற்கான தேவையை இனங்காண்பதற்கும் விதை நெல்லின் தரத்தை |

| | | | |
|---|---|---|---|
| | | | பேணுவதற்கு களஞ்சியப்படுத்தல் முறைமையொன்றை தயாரிப்பதற்கும் பணிப்பாளரை நான் அறிவுறுத்தியுள்ளேன். |
| (இ) | கடந்த 03 ஆண்டுகளின் போது கரடியனாறு பண்ணையில் நெல், காய்கறிகள் மற்றும் உப உணவுப் பயிர்கள் தொடர்பாக ஏற்பட்ட பயிர்ச்செய்கை சேதங்கள் ரூபா.4,531,335 ஆகும். | பயிர் சேதங்களை இழிவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வறட்சி, வெள்ளம், காட்டு யானைகள் மற்றும் காட்டு விலங்குகளால் குறித்த சேதம் ஏற்பட்டிருந்தது என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். |
| (ஈ) | குண்டசாலை விவசாய கல்லூரியில் கார் தரிப்பிடங்களை நிர்மாணிப்பதற்கான பொறியியல் மதிப்பீட்டின் விடய இலக்கம் 09 இன் பிரகாரம் 125mm தடிப்புடன் நிலத்திற்கான கொங்கிறீட் இடப்பட வேண்டிய போதிலும் 2020 சனவரி 13 இல் மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரீட்சிப்பின் பிரகாரம் அதன் தடிப்புத்தன்மை 80mm ஆக காணப்பட்டது. அதற்கிணங்க ஒப்பந்ததாரரால் மேற்கொள்ளப்பட்டிருக்காத 78.43 கனமீற்றரிற்காக ரூபா.162,350 தொகை ஒப்பந்ததாரரிற்கு மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. | மதிப்பீடுகளின் பிரகாரம் உரிய வேலையை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அவ் விடயமானது 75mm ஆக முழுமையாக கருத்தில் கொள்ளப்பட்டு அதற்கிணங்க கொடு:ப்பனவுகள் மேற்கொள்ளப்படுவதற்கும் மிகுதி கொடுப்பனவை அறவீடு செய்வதற்கும் தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன். |

## 3.9 முகாமைத்துவ நலிவுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | குண்டசாலை விதை உற்பத்தி பண்ணையில் நீர் பம்பிக்கூட முறைமை நிர்மாணிக்கும் | ஏற்றுக் கொள்ளப்பட்ட அளவிடைத் திட்டத்தின் மூல விடயங்களுக்கு இணங்க | தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் விலை |

| | | | |
|---|---|---|---|
| | மதிப்பீடு கட்டிட அங்கீகரிக்கப்பட்ட விலை வீதம் (BSR) மற்றும் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் விலை வீதம் (Water Board Rate) அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும், மதிப்பீட்டு விடய இலக்கம் 02 இன் விலை வீதம் ரூபா.5,000 வீதம் 150 மீற்றர் அளவிற்காக மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி ரூபா.750,000 ஆக இருக்க வேண்டிய போதிலும், அது ரூபா.900,000 ஆக காண்பிக்கப்பட்டமையின் அடிப்படையில் பொறியியலாளர் மதிப்பீடு சரியாக பரீட்சிக்கப்படாமல் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. | (Standard of Measurement of Method) அளவிடை பத்திரங்கள் தயாரிக்கப்பட வேண்டியிருந்ததுடன் மதிப்பீடு சரியாக தயாரிக்கப்பட வேண்டும். | வீதத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட விஷேட விலை வீத்தின் அடிப்படையில் (SSR) இந்த மதிப்பீடு தயாரித்துக் கொள்வதற்கு தவறியிருந்ததுடன் மதிப்பீடு தயாரிக்கும் போது ஏற்பட்ட வழுக்கள் கணிப்பீட்டின் போது ஏற்பட்ட தாமத வழுக்களாக இருந்தது என அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | மரக்கறி விதை நிலையத்தினால் 2015 ஆம் ஆண்டின் இறுதியில் காணப்பட்ட விதை இருப்புக்களில் கடந்த 04 வருட காலத்தில் 10 வகையான விதைகளுக்குரிய விநியோகித்தல் 0 வீதத்திற்கும் 36 வீதத்திற்கும் இடையிலான வீச்சில் காணப்பட்டது. இதன் பிரகாரம் இந்த விதைகள் 05 வருடங்களுக்கு அண்மித்த காலமாக களஞ்சியப்படுத்தப்பட்டு வைக்கப்பட்டமையினால் அவைகளின் முளைதிறன் நலிவடைந்தமையின் அடிப்படையில் நிராகரிக்கப்படுமாயின் அண்ணளவாக உரித்தற்றுப் போகக்கூடிய விற்பனை வருமானம் ரூபா.14,629,064 ஆக காணப்பட்டது. | விதைகளின் முளைதிறன் குறைவடைவதற்கு முன்னர் விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தேசிய மட்டத்தில் அமுல்படுத்தப்படுகின்ற நிகழ்ச்சித் திட்டத்திற்காக கேள்விகள் கிடைக்கப் பெறுகின்றமையினால் அதற்காக பாதுகாப்பு வைப்பு (buffer stock) விதை இருப்பை வைத்துக் கொள்ளல் திணைக்களத்திற்குரிய பணியாக இருந்தது. அதற்காக விதை உற்பத்தி செய்யப்பட்டு களஞ்சியப்படுத்துதல் மேற்கொள்ளப்பட வேண்டி ஏற்பட்டிருந்தது என அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (இ) | விவசாய திணைக்களத்தினால் உற்பத்தி செய்யப்படுகின்ற அடிப்படையான, இனவிருத்தியை பதிவு செய்தல் மற்றும் ஏற்றுக் கொள்ளப்பட்ட விதைகளின் முளைதிறன் மட்டத்தை உச்ச | ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இந்த இனவிருத்தி, ஆரம்ப மற்றும் ஏற்றுக்கொள்ளப்பட்ட விதைகளின் முளைதிறன் மட்டத்தை உச்ச அளவில் |

| | | | |
|---|---|---|---|
| | அளவில் வைத்துக் கொள்வதற்கு எவ்வளவு காலம் குளிரூட்டியில் களஞ்சியப்படுத்தி வைக்க முடியும் போன்றவை தொடர்பான ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | | வைத்துக் கொள்ளுதல் தொடர்பாக எதிர்காலத்தில் ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்கு கவனம் செலுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (ஈ) | மரக்கரி விதை நிலையத்தில் 05 வருடங்களை விஞ்சிய ஆரம்ப மற்றும் இனவிருத்தி மற்றும் ஏற்றுக் கொள்ளப்பட்ட மரக்கரி விதைகள் 16887 கிலோ கிராம் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்ததுடன், 21 மரக்கரி விதைகளுக்கு உரியதாக பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம் கடந்த காலத்தில் அவற்றின் முளைதிறன் சக்தி படிப்படியாக குறைவடைந்திருந்ததை காணமுடிந்தது. இவற்றின் முளைதிறன் 98 வீதத்திற்கும் 73 சதத்திற்கும் இடையிலான வீச்சில் காணப்பட்டது. இந்த விதைகள் நீண்ட காலம் களஞ்சியப்படுத்தப்பட்டு வைக்கப்பட்டமையினால் அவற்றின் முளைதிறன் சக்தி பலவீனமடைந்து காணப்பட்டது. | தரமான உயர்ந்த விதைகளை பெற்றுக் கொள்ளும் போது அவற்றை இயலுமான வரையில் விரைவாக விவசாயிகளுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | விதை விற்பனையின் போது கவனத்தில் கொள்ளப்படுகின்ற ஆகக் குறைந்த முளைதிறன் வீதம் 75 சதவீதம் ஆனமையால், வருடத்திற்கு ஒரு முறை கிடைக்கின்ற “C” அறிக்கையின் அவதானிப்பினை மேற்கொண்டு அவ்வாறான விதைகளை கூடிய விரைவில் விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (உ) | மரக்கரி விதை நிலையத்தினால் 2011 ஆம் ஆண்டு முதல் 2019 நவம்பர் 16 ஆம் திகதி வரை கடன் அடிப்படையில் ரூபா.1,818,573 பெறுமதியான 9 பயிர் வகைகளுக்குரியதாக அண்ணளவாக 476 கிலோ கிராம் வழங்கப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வு திகதியான 2019 திசெம்பர் 23 ஆம் திகதி வரை அந்த பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 02 வார கடன் அடிப்படையில் விநியோகிக்கப்பட்ட விதைகளுக்காக கிடைக்க வேண்டிய பணத்தை ஒவ்வொரு வருடமும் 06 மாதங்களுக்கு ஒரு தடவை உரிய நிறுவனங்களுக்கு மீள் நினைவூட்டல் கடிதம் அனுப்பப்பட்டு அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (ஊ) | 1951 இன் 25 ஆம் இலக்க மண் பாதுகாப்பு சட்டத்தில் குறிப்பிடப்பட்ட பணிப் | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஒட்டு மொத்த நாட்டையும் மேவுகை செய்யும் வகையில் |

| | | | |
|---|---|---|---|
| | பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக இந்த சட்டத்தினால் மேவுகை செய்யப்படுகின்ற பிரதேசங்களாக 10 மாவட்டங்கள் இனங்காணப்பட்டிருந்த போதிலும், ஒட்டு மொத்த நாட்டினையும் மேவுகை செய்யும் வகையில் ஏற்பாடுகளை திருத்துதல் 2019 திசெம்பர் 02 ஆம் திகதி வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | | தயாரிக்கப்பட்ட புதிய பிரமாணங்களை அடங்கிய வர்த்தமானி பத்திரமொன்றை விநியோகிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இது வரையிலும் மும்மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டு எங்களது திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிப் பொறுப்புக்களின் பகுதிகள் பூர்த்தி செய்யப்பட்டு தேவையான மிகுதி நடவடிக்கைகளுக்காக அமைச்சரவை அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்காக விவசாய அமைச்சிற்கு அனுப்பப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (எ) | 1996 இன் 24 ஆம் இலக்க மண் பாதுகாப்பு சட்டத்தின் 3(2) ஆம் பிரிவின் பிரகாரம் நியமிக்கப்பட்ட மண் பாதுகாப்பு சபையின் கூட்டம் 2017 செப்தெம்பர் 28 ஆம் திகதியின் பின்னர் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | மண் பாதுகாப்பு சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | மிகவும் அரிதாக மண் பாதுகாப்பு சபை நடாத்தப்படுகின்றது என அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (ஏ) | இயற்கை வள முகாமைத்துவ நிலையத்திற்கு உரிய காலநிலை அளவிடும் நிலையம் மன்னார், முல்லைத்தீவு மற்றும் கொழும்பு போன்ற 03 மாவட்டங்களில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை. | ஏனைய மாவட்டங்களிலும் காலநிலை நிலையங்களை ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இந்த மாவட்டங்களில் காலநிலை தரவுகளின் தேவை வளிமண்டளவியல் திணைக்களத்திலிருந்து பூர்த்திசெய்து கொள்ளப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (ஐ) | விவசாய திணைக்களத்தின் தேவைகளுக்காக விவசாய | விவசாய காலநிலை அளவீடுகளை | விவாசாய காலநிலை அலகு ஸ்தாபிக்கப்படாத |

| | | | |
|---|---|---|---|
| | காலநிலை தரவுகளை சேகரித்தல், பகுப்பாய்வு செய்தல் மற்றும் தொடர்பாடல் செய்தல் போன்ற நோக்கங்களில் அதாவது, மழை வீழ்ச்சி மண் வெப்பநிலை, ஈரப்பதன், காற்றின் வேகம், காற்றின் திசை போன்றவற்றை அளவிடுவதற்கு 46 விவசாய காலநிலை வலயங்கள் இனங்காணப்பட்டிருந்த போதும், அதில் 18 வலயங்களில் விவசாய காலநிலை அளவைகள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை. | ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | விவசாய வலையங்களின் விவசாய காலநிலை அலகுகளை ஸ்தாபித்தல் மேற்கொள்ளப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (ஒ) | கந்தளாய் பிரதி விவசாய பணிப்பாளர் அலுவலகத்தின் மூலம் 2019 பெரும்போகத்தில் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தம் விதை உற்பத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 26 ஹெக்டேயரில் உற்பத்தி செய்யப்பட்ட 03 விதை நெல் இனங்கள் பயிரிடப்பட்ட இனங்களை மாற்றியதன் காரணமாக நிராகரிக்கப்பட்டமையினால் அண்ணளவாக 5600 பூசல் விதை நெல் பெற்றுக் கொள்வதற்கு முடியாதிருந்தது. | எதிர்பார்த்த இலக்கினை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏனைய இனங்கள் காணப்பட்ட பிரதேசங்களில் பயிர் செய்கைக்கு ஈடுபடுத்துவதற்காகவும் அறுவடை செய்யப்படுகின்ற இயந்திரங்கள் மூலம் அறுவடைகளின் போது, நெற்கள் கலந்திருந்தமையின் அடிப்படையிலும், விதைகளை உறுதிப்படுத்தும் சேவை மூலம் நிராகரிக்கப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (ஓ) | கந்தளாய் பிரதி விவசாய பணிப்பாளர் அலுவலகத்தின் இருப்பு பரிசோதனை அறிக்கையின் பிரகாரம் 12 சந்தர்ப்பங்களின் போது முளைதிறன் நலிவாக இருந்தமை, காலாவதியாகி இருந்தமை, எறும்புகள் மற்றும் இயந்திர கோளாறுகளின் காரணமாக விதை நெல் 8138 கிலோ கிராம் அளவில் நுகர்வதற்கான நெல்லுக்கு | களஞ்சியத்தை மிகவும் சுத்தமான நிலைமையில் பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | களஞ்சியத்தினை திருத்தியமைத்து மிகவும் சிறந்த சுத்தத்துடன் பேணிச் செல்லப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | உட்பட்டிருந்தன. | | |
| (ஔ) | தாவர மரபணு வள நிலையத்தில் மரபணு வங்கியில் 15806 மரபணு மாரிதிகள் பாதுகாக்கப்பட்டிருந்ததுடன், பயிர் செய்கை பிரதேச அமைவிடம், காணப்படுகின்ற காலநிலை மாற்றங்கள் போன்ற விடயங்களின் காரணமாக 2019 ஒக்தோபர் 25 ஆம் திகதி வரையிலும், திரிவுபடுத்தலுக்குட்படுத்தப்பட்ட மரபணு மாதிரிகளின் எண்ணிக்கை 6891 அதாவது, 44 சதவீதம் ஆன மிகவும் கீழ் மட்டத்தில் காணப்பட்டது. | மரபணு மாதிரிகளை திரிவுடுத்துவதன் மூலம் கவர்ச்சிகரமான பயிரகள் மற்றும் மரங்களை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | இந்த பிரிவின் மூலம் மரபணு வள தரமாக்கல் மற்றும் திரிவுடுத்துதல் போன்ற இரண்டு விடயங்களும் மேற்கொள்ளப்பட்டமையினால் ஒரு போகத்தின் போது 200 மரபணு வளங்கள் மாத்திரம் திரிவுடுத்தப்பட்டிருந்தது. பயிர் செய்கை பிரதேச அமைவிடம் மற்றும் தொழிலாளர்கள் போதியளவாக இல்லாதிருந்தமையினால் திணைக்களத்தின் கீழ் காணப்படுகின்ற ஏனைய ஆராய்ச்சி நிறுவனங்களுடன் தொடர்பினை பேணி மரபணு வள தரமிடல் தற்போதும் மேற் கொள்ளப்படுகின்றது என அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (க) | வருடம் ஒன்றிக்கு ரூபா. 6 மில்லியனை விஞ்சிகின்ற மின்சார செலவினம் ஒன்றைச் செய்து தாவர மரபணு வள நிலையத்தின் மின்சாரத்தை ஈடுபடுத்தும் போது ஏற்படுகின்ற மேலதிக எரிபொருள் செலவினங்களை குறைக்கும் நோக்கில் சூரிய கல சக்தி முறைமையொன்றை ஸ்தாபிப்பது தொடர்பில் 2017 ஆம் ஆண்டின் போது கவனம் செலுத்தப்பட்டிருந்த போதிலும், 2019 ஒக்தோபர் 30 ஆம் திகதி வரையிலும் அந்த பணிகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை | எதிர்பார்த்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இது தொடர்பாக இந்த ஆண்டின் போதும் விஷேட அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டு புதுப்பிக்கத்தக்க மின்வலு சக்தி அமைச்சுக்கு அனுப்பப்பட்டிருந்ததுடன் கிடைக்கின்ற நிதி ஏற்பாட்டின் அடிப்படையில் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (கா) | பூங்கா ஆராய்ச்சி பண்ணையொன்றான பஸ்யால பண்ணை ஸ்தாபிக்கப்பட்டிருந்த போதிலும், 2010 ஆம் ஆண்டில் ரம்புட்டான் பயிர் செய்கைக்குரிய ஆராய்ச்சி ஒன்றும் மற்றும் 2015 | புதிய ஆராய்ச்சிகளை மேற்கொள்வது தொடர்பில் கவனம் செலுத்தப்படல் வேண்டும். | இது வரையிலும் புதிய ஆராய்ச்சிகள் மற்றும் பயிர் செய்கைகள் மேற் கொள்ளப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | ஆம் ஆண்டில் பப்பாசி பயிர் செய்கை தொடர்பாக ஆராய்ச்சி ஒன்றும் ஆரம்பிக்கப்பட்டு பேணிச் செல்லப்பட்டிருந்ததுடன், கடந்த 03 வருட காலத்தில் செயற்பாட்டிற்கு கொண்டுவரப்பட்ட ஆராய்ச்சிகளின் எண்ணிக்கை 03 ஆன ஆகக் குறைந்த அளவில் காணப்பட்டது. | | |
| (கி) | கண்ணொறுவ பூங்கா பயிர் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்திற்கு சொந்தமாக காணப்பட்ட மத்திய நூலக தகவல் மற்றும் தொடர்பாடல் நிலையத்திற்கு கையளிக்கப்பட்ட சந்தர்ப்பம் வரையில் பிரதான நூலகராக செயற்பட்ட உத்தியோகத்தரினால் நூலகத்தின் புத்தகங்களை கையளிக்கும் போது காணப்பட்ட 96 புத்தகங்களின் பற்றாக்குறை தொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | முறையான ஆராய்ச்சியொன்றை மேற்கொண்டு பொறுப்பு வாய்ந்தவரை தீர்மானித்து உரிய நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | மத்திய நூலகத்தில் காணப்பட்ட குறைபாடுகளை சரி செய்து கொள்வதற்கு தேவையான ஆரம்ப நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. உரிய புத்தகங்களின் பற்றாக்குறை தொடர்பாக நிதிப் பிரமாணம் 104 இன் பிரகாரம் பரிசோதனை மேற்கொள்ளப் படுகின்றது என அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (கீ) | குண்டசாலையில் பழவகை இன பாதுகாப்பு நிலையத்தினால் தாய் மரமாக இனங்காணப்படாதிருந்த மா, ரம்புட்டன், நாரத்தம், தோடை போன்ற பழவகை இனங்களின் மூலம் வழங்கப்பட்ட கிளைகளை ஒட்டுதல் மேற்கொண்டு அந்த பிரதேசத்தில் நட்ட விற்பனை செய்தல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | விதைகளை உறுதிப்படுத்தும் சேவையில் பதிவு செய்யப்பட்டுள்ள தாய் மரங்களின் மூலம் பெறப்பட்ட கிளைகளைப் பயன்படுத்தி ஒட்டுதல் வேண்டும். | விதைகளை உறுதிப்படுத்தும் சேவைகளின் மூலம் உறுதிப்படுத்துவதற்கு கோரப்பட்டுள்ளதுடன், தற்போது பணிப்பாளர் (பழவகை ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி) இன் ஆலோசனையின் அடிப்படையில் வரையறுக்கப்பட்ட மரங்களின் எண்ணிக்கையின் அளவு உற்பத்தி செய்யப்படுகின்றது என அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (கு) | குண்டசாலை பழவகை இன ஆராய்ச்சி நிலையத்தினால் 2013 ஆம் ஆண்டு முதல் அவ்வப்போது ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் | எந்தவொரு நபருக்கும் பழவகை இனங்கள் தொடர்பாக இலகுவான அறியக்கூடிய வகையில் பழவகைகளை இனங்களை | லேபல் இடும் நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படுகின்றது என அறிவிக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | வெளித்தரப்பினரால் வழங்கப்படுகின்ற பழவகை இனங்கள் பிரதேசங்களில் தனித்தனியாக நடுவதற்கோ அல்லது லேபல் இடுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பாதுகாத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | |
| (கூ) | குண்டசாலையின் பழவகை இன பாதுகாப்பு நிலையத்தில் 2013 ஆம் ஆண்டு முதல் 2020 பெப்ரவரி 06 ஆம் திகதி வரையிலும் கிடைத்திருந்த பல்வேறு பழவகை இனங்களுக்குரிய 903 பழவகை கன்றுகள் ஆக இருந்ததுடன், அதில் இறந்த மற்றும் பலவீனமான பழவகை கன்றுகளின் எண்ணிக்கை 196 அதாவது, 22 சதவீதம் ஆக இருந்தது. அவ்வாறு இறந்த மற்றும் பலவீனமான கன்றுகளை அகற்றுவதற்கு முறையான வேலைத் திட்டமொன்று அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. அந்த கன்றுகளுக்காக அவை கிடைத்த இடங்களில் இருந்து அந்த இனங்களைப் பெற்று பாதுகாத்துக் கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்க வேண்டிய போதிலும் அவ்வாறு மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | இறந்த மற்றும் பலவீனமான கன்றுகளை அகற்றுவதற்காக முறையான வேலைத்திட்டமொன்றை அமுல்படுத்துதல் மற்றும் அந்த கன்றுகளுக்கு பதிலாக அவை கிடைத்த நிலையங்களில் அந்த இனங்களைப் பெற்று பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | அவ்வாறு இறந்த மற்றும் பலவீனமான கன்றுகளுக்காக உரிய பதிவு செய்யப்பட்ட தாய் மரங்களில் இருந்து பெறப்பட்டு ஸ்தாபிப்பதற்கு தற்போது வேலைத்திட்டமொன்று ஈடுபடுத்தப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (கெ) | குண்டசாலை விவசாய கல்லூரியின் மூலம் NVQ 6 மட்டத்தில் கடந்த 05 வருடங்களில் பதிவு செய்த மாணவர்களின் எண்ணிக்கை மற்றும் பாடநெறி பூர்த்தி செய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை தொடர்பான செயல்முன்னேற்றத்தை பரீட்சித்த போது அந்த பாடநெறியில் பதிவுசெய்த மாணவர்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிடும் போது பாடநெறிகளை பூர்த்தி செய்யாத மாணவர்களின் எண்ணிக்கை 7 சதவீதம் முதல் 28 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. | விவசாய துறைகளுக்கு பூரணமாக மாணவர்களை பங்களிப்புச் செய்யும் இயலுமையை அதிகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இந்த பாடநெறியின் இறுதியில் வேலை வாய்ப்பொன்று கிடைக்கப் பெறுகின்றதா என நிச்சியமற்ற நிலைமையினால் மாணவர்கள் இவ்வாறு பாடநெறிகளை விட்டுச் செல்வதற்கான காரணங்களாக இருந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (கே) | குண்டசாலை விவசாய கல்லூரியின் விடுதிகளில் இருந்து சலுகை விலையின் கீழ் போதனாசிரியர்களுக்காகவும் உணவு வழங்கல் மேற்கொள்ளப்படுகின்றது. ஆவ்வாறு வழங்கப்படுகின்ற உணவுகளின் சலுகை விலைகள் 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக திருத்தப்பட்டிருக்கவில்லை. | சந்தை விலைக்கு ஒப்பாக சலுகை விலையை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | விலைகளைத் திருத்துவதற்காக நியமிக்கப்பட்ட குழுவினால் உரிய அறிக்கை வழங்கப்பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் விலைகளில் திருத்தங்களை செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (கை) | குண்டசாலை விவசாயக் கல்லூரியின் 04 விடுதிகளின் நிர்வாகத்திற்காக விவசாய ஆலோசகர் பதவியில் இருக்கின்ற இரண்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். இதன் காரணமாக அந்த உத்தியோகத்தர்களுக்கு தமது பாட அறிவினை விருத்தி செய்து கொள்வதற்கும், துறைசார் அறிவு மற்றும் அனுபவங்களை பெற்றுக் கொள்ளும் சந்தர்ப்பம் இழக்கப்பட்டிருந்தது. | தொழில் திறன் மற்றும் திறமையுள்ள உத்தியோகத்தர்களை இயலுமான வரை செயற்திறனாகவும், வினைத்திறனாகவும் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | விவசாய கல்லூரிக்கான விடுதி பொறுப்பு உத்தியோகத்தர் பதவியொன்று தயாரிக்கப்பட்டு அதற்குரிய ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது என அறிவிக்கப்பட்டுளள்ளது. |
| (கொ) | குண்டசாலை விவசாய கல்லூரியில் 04 விடுதிகளில் காணப்படுகின்ற உட்கட்டமைப்பு வசதிகள், சுகாதார மற்றும் சமையலறையின் வசதிகள் போதியளவில் இல்லாதிருந்ததுடன் அதன் பராமரிப்பும் உரிய பிரகாரம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | மாணவர்களுக்காக போதியளவான உட்கட்டமைப்பு மற்றும் சுகாதார வசதிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் கிடைக்கின்ற நிதி ஏற்பாட்டின் அடிப்படையில் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (கோ) | வல்பிட்ட விவசாய பண்ணையின் முகாமையாளரினால் தனியார் கைத்தொழிற்சாலையிலிருந்து அகற்றப்பட்ட கழிவுப் பொருட்களான கருப்பு நிற தூள் அடங்கிய 20 பொதிகள் அளவில் தென்னை பயிர்ச் செய்கைக் காணியில் கொண்டு போடுவதற்காக அனுமதி | அரசாங்க சொத்துக்களை பாதுகாத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தற்போது முன்னாள் கடமையில் ஈடுபட்டிருந்த பண்ணை முகாமையாளர் இடம் மாற்றம் பெற்றுச் சென்றிருந்தமையும், அவர் தொடர்பாக ஆரம்ப விசாரணைகள் மேற்கொள்வதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | வழங்கப்பட்டிருந்ததுடன், இதில் ஒரு பொதியின் நிறை 500 கிலோ கிராம் அளவாகும். இதன் காரணமாக அச் சுற்றாடலும் வெளிச் சுற்றாடலும் அசுத்தமடைந்திருந்தது. | | நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், பண்ணையின் முகாமையாளரினால் மேற்கொள்ளப்பட்டாதாக குறிப்பிடப்பட்ட மோசடிகள் தொடர்பாக இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழுவினாலும் விசாரணையொன்று மேற் கொள்ளப்படுகின்றது என அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (கௌ) | வெளிநாட்டு புலமைப் பரிசிலுக்காக வெளிநாடு சென்று உடன்படிக்கை மீறிய 44 உத்தியோகத்தர்கள் தொடர்பாக அரசாங்கத்திற்கு அறவிட வேண்டிய கூட்டுமொத்தமான ரூபா.30,739,883 தொகை 2020 யூன் 06 ஆம் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | அரசாங்கத்திற்கு அறவிட வேண்டிய பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 44 உத்தியோகத்தர்களிடம் இருந்து புலமைப் பரிசில் நிதியினை அறவிடுவதற்காக அந்த உத்தியோகத்தர்களின் முகவரியினை கண்டறிய முடியாதிருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. |
| (ச) | புலமைப் பரிசில் நிதியினை அறவிடுவதற்கு முடியாது காணப்படுகின்ற 05 உத்தியோகத்தர்களிடமிருந்தான புலமைப் பரிசில்களின் பெறுமதி ரூபா.2,445,820 ஆக இருந்த போதும், காலங்கடந்தமையினால் அரசாங்கத்திற்கு அறவிட வேண்டிய பணத்தை அறவிடுவதற்கு சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுக்க முடியாத நிலைமைக்கு உட்பட்டிருந்தது. | அரசாங்கத்திற்கு அறவிட வேண்டிய பணத்தை அறவிடுவதற்கு முகாமைத்துவம் கூடிய கவனம் செலுத்துதல் வேண்டும். | அந்த உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிடுதல் தொடர்பான வழக்கு அவர்களின் முகவரியை கண்டறிய முடியாமையினால் காலாவதியாகியிருந்தது டன் தண்டப்பணத்தை கணிப்பிடுவதற்கு காலதாமதமடைதல் போன்ற தவிர்க்க முடியாத காரணங்களினால் ஏற்பட்டிருந்ததாக அறிவிக்கப்பட்டிருந்தது. |
| (சா) | அப்பில் கன்று உற்பத்தியின் போது அடிப்படையாக பயன்படுத்தப்படுகின்ற ஆணிவேர் மூலம் பெறப்பட்ட கன்றுகளின் அளவு மிகவும் குறைவடைந்தமைக்கான தீர்வாக ஒட்டு மர கன்றுகள் | புதிய தொழில்நுட்ப முறைமையின் மூலம் ஆராய்ச்சிகளை நடாத்தி நோய்களை தவிர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அப்புதிய இனங்களை கையாண்டு பார்க்கும் ஆராய்ச்சிகள் இது வரையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுட ன் துருப்பிடித்தல் நோய்க்கு |

| | | | |
|---|---|---|---|
| | பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும், அவைகளும் துருப்பிடித்தல் நோய்க்கு (Rust Disease) உட்பட்டு அழிவடைந்திருந்தது. இந்த நோய்க்கு தீர்வை காண்பதற்காக மர ஆய்வு பிரிவுகளிலும் திணைக்களத்தின் ஏனைய பிரிவுகளிலும் ஒட்டு மொத்த பங்களிப்பு பெறப்பட்டிருக்கவில்லை. | | உள்ளாகுவதை குறைத்து புதிய மர இனங்களை கண்டறிவதற்கு ஆராய்ச்சிகள் மேற் கொள்ளப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (சி) | மீளாய்வாண்டின் போது உற்பத்தியாளர்களுக்கு கண்ணொறுவ உணவு ஆராய்ச்சி பிரிவினால் தரச் 100 சான்றிதழ் அளவில் விநியோகிக்கப்பட்டிருந்த போதிலும், மாதிரி பரிசோதிக்கப்பட்டதன் பின்னர் கால ரீதியில் இவ்வாறான நிலைமையை பரீட்சிப்பதற்காக நிறுவனத்தினால் பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | பின்தொடர் நடவடிக்கைகளின் மூலம் உற்பத்திகளின் தரங்களை பாதுகாத்துக் கொள்வதற்கு முடியுமான மோசடிகளை தடுத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | விவசாய திணைக்களமாக நுகர்வோர் சேவை அதிகாரசபையுடன் இணைந்து உத்தேச திட்டமொன்றை பேணிச்செல்வதற்காக உதவ முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. |

## 4. நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் 2030 நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் விவசாயத் திணைக்களத்தினால் தமது விடயப்பரப்பிற்குரிய நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகள் வரைவாக்கப்பட்டு இருந்த போதும் 2020 யூன் 23 ஆந் திகதி வரை அது தொடர்பாக இறுதி தீர்மானத்திற்கு வரவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை இனங்கண்டு நிறைவேற்றுவதற்குத் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | விவசாயத் திணைக்களத்தினால் தமது விடயப்பரப்பிற்குரிய நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகள் வரை வாக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் 2030 இல் நிவேற்றப்பட வேண்டிய போதிலும் ஒவ்வொரு ஆண்டில் மேற்கொள்ள வேண்டிய அளவு | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை | ஒவ்வொரு ஆண்டில் மேற்கொள்ள வேண்டிய அளவு தொடர்பாக திட்டமொன்றை தயாரிப்பதற்காக |

| | | | |
|---|---|---|---|
| | தொடர்பாக திட்டமொன்ற தயாரிக்கப்பட்டு அதன் பிரகாரம் நிதிஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட வேண்டிய போதிலும் திணைக்களத்தினால் ஒவ்வொரு ஆண்டிற்காக நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை நிறைவேற்ற உரிய திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | இனங்கண்டு நிறைவேற்றுவதற்குரிய திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். | விவசாயத் திணைக்களத்திற்குரிய சகல நிறுவனங்களின் பங்களிப்புடன் தேவையான நடவடிக்கைகள் திட்டமிடப்படடுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |

**5. பிரஜை / சேவை பெறுனர்களின் விஞ்ஞாபனம்**

**5.1 பொது மக்களுக்கான சேவைகளை நிறைவேற்றுதல்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2016 இன் 12 ஆம் இலக்க தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் 10 ஆவது பிரிவின் பிரகாரம் 2019 ஆம் ஆண்டிற்குரிய ஒட்டு மொத்த திணைக்களத்தையும் மேவுகை செய்யும் வகையில் விவசாய திணைக்களத்தினால் தகவல் அறியும் உரிமை தொடர்பான ஆணைக்குழுவிற்கு வழங்க வேண்டிய தகவல்கள் 2020 யூன் 30 ஆம் திகதி வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஒட்டு மொத்த திணைக்களத்தையும் மேவுகை செய்யும் வகையில் சகல பணிப்பாளர் பிரிவுகளின் கீழும் இருக்கின்ற தகவல்கள் உத்தியோகத்தர்களிடம் இருந்து 2019 ஆம் ஆண்டுக்குரிய அறிக்கைகள் தொடர்பான தகவல்களைக் கோரி ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது என அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | மேற்கூறப்பட்ட (அ) பந்தியில் குறிப்பிடப்பட்ட சட்டத்தின் 26 ஆவது பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் ஆணைக்குழுவிற்கும் தொடர்புபடுத்தல் விபரம் மற்றும் ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள் தொடர்பாகவும், தகவல் உத்தியோகத்தர்களை | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | உரிய சகல விபரங்களும் இணைய தளத்தில் காட்சிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. மேலும், தகவல் சட்டம் தொடர்பாக கோரும் விபரம் மற்றும் அறவிடப்படுகின்ற |

| | | |
|---|---|---|
| தொடர்புபடுத்துதல், பெயரிடப்பட்ட உத்தியோகத்தர் தொடர்பான விபரங்கள் மற்றும் தகவல்களை பெற்றுக் கொள்வதற்காக அறவிடப்படுகின்ற கட்டணங்கள் தொடர்பாக அலுவலக வளவில் தெரியும் இடம் ஒன்றில் அல்லது உத்தியோகபூர்வ இணைய தளத்தில் காட்சிப்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும் திணைக்களத்தினால் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | கட்டணங்கள் தொடர்பான விபரங்கள் பிரதான அலுவலகத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. |

## 6. மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | திணைக்களத்தின் நடவடிக்கைகளை முறையாகவும், திறமையாகவும் பேணிச் செல்வதற்கு சேவைத் தேவை பொருத்தமான சந்தர்ப்பங்களின் போது இனங்காணப்பட்டு தேவையான சந்தர்ப்பத்தில் ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் 2426 வெற்றிடங்களை நிரப்பவதற்கு நிறுவனம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | விரைவாக வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இலங்கை கமநல சேவையின் 678 பதவிகள் இலங்கை கமநல சேவைக்காக ஆட்சேர்க்கும் இலக்கம் SC(FR)283/2014 ஆம் இலக்க வழக்கின் காரணமாக தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. இலங்கை தொழில்நுட்ப சேவையின் விவசாய ஆலோசகர் பதவிகள் 325 மற்றும் ஆராய்ச்சி உப உதவி பதவிகள் 90 என்பவற்றை நிரப்புவதற்காக இது வரையிலும் அங்கீகாரம் கிடைத்திருக்கவில்லை. ஏனைய ஆட்சேர்ப்புக்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன், தேர்தலின் காரணமாக சகல |

| | | | |
|---|---|---|---|
| | | | ஆட்சேர்ப்புக்களும் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | குண்டசாலை பழவகை இன பாதுகாப்பு நிலையம் ஆரம்பிக்கப்பட்டு 08 வருடங்கள் கடந்திருந்த போதிலும், நிறுவனத்திற்காக மனித வலு மதிப்பீடொன்றை அங்கீகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தேவையான பதவியணியினர் அங்கீரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தேவையான பதவியணியினர் அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (இ) | இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் 2009 பெப்ரவரி 20 ஆம் திகதி விநியோகிக்கப்பட்ட 1589/30 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட செயல் நடைமுறை விதியும் 1 ஆவது தொகுதியின் xviii ஆம் அத்தியாயத்தின் 202 ஆம் விதியின் ஏற்பாடுகள் மற்றும் அதன் பிரகாரம் தயாரிக்கப்பட்ட விவசாய திணைக்களத்தின் தொழில்நுட்ப உதவியாளர் (தொழில்நுட்ப பரவல்/ தொழில்நுட்ப ஆராய்ச்சி/ பொறியியலாளர்) உத்தியோகத்தர்கள் மற்றும் விவசாய திணைக்களத்தின் ஆரம்ப சேவை தொகுதிகளின் பதவிகளில் ஈடுபடுகின்ற உத்தியோகத்தர்களின் வருடாந்த இடமாற்றங்கள் தொடர்பான நடைமுறையின் 04 ஆம் பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த போதிலும், 05 நிறுவனங்களுக்குரிய 71 உத்தியோகத்தர்கள் மற்றும் பொறியியல் பிரிவில் சேவைகளில் ஈடுபடுகின்ற 15 உத்தியோகத்தர்கள் 05 | செயல்நடைமுறை விதியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தொடர்ச்சியாக 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் உரித்தான ஒன்றிணைந்த சேவையில் இல்லாத ஏனைய ஆரம்ப சேவை தொகுதிகளின் உத்தியோகத்தர்களின் உள்ளக இடமாற்றங்கள் 2021 ஆம் ஆண்டின் போது மேற்கொள்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | வருடங்கள் முதல் 31 வருடங்கள் வரையான காலம் ஒரே நிறுவனத்தில் சேவையாற்றியிருந்தனர். | | |
| (ஈ) | 2018 சனவரி 24 ஆம் திகதிய 02/2018 ஆம் இலக்க பொது நிர்வாக செயலாளரின் சுற்றறிக்கையின் பிரகாரம் 07 நிறுவனங்களுக்குரிய 234 உத்தியோகத்தர்களுக்கு வருடமொன்றுக்கு 12 மணித்தியாலத்திற்கு குறையாத பயிற்சி சந்தர்ப்பங்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையில் காணப்படுகின்ற பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கிடைக்கின்ற நிதி ஏற்பாட்டினை கவனத்தில் கொண்டு சகல உத்தியோகத்தர் களுக்கும் பயிற்சி சந்தர்ப்பங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. |